

# நான் உறங்கிய தொட்டில்

வயவை லம்போ

# நான் உறங்கிய தொட்டில்

ஆசிரியர்: வயவை லம்போ
நூல் வகை : கவிதை
மொழி : தமிழ்
இரண்டாம் பதிப்பு : 2017
நூல் உரிமை : ஆசிரியருக்கே
அட்டைவடிவமைப்பு : வயவை லம்போ
கணனிப்பதிப்பு : வயவை லம்போ
நூல்வடிவம் : வயவை லம்போ
நூலின் அளவு : 18.0 x 13.0 செ.மீ
எழுத்தளவு : 11 புள்ளிகள்
பக்கங்கள் : 120
வெளியீடு : வயாவிளான் மக்கள் ஒன்றியம் பிரான்ஸ்



இயற்கை எனது நண்பன், வாழ்க்கை எனது
தத்துவாசிரியன், வரலாறு எனது வழிகாட்டி...

தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு வே. பிரபாகரன்

# தொட்டில் குழந்தை...

அம்மாவின் ஆராரிரோ பாட்டுக் கேட்டு என்னை உறங்க வைத்த தொட்டில் அல்ல இது. தமிழோடு நானும் என்னோடு தமிழும் ஒன்றிப் போய் கட்டிய தொட்டில் தான் இந்த நான் உறங்கிய தொட்டில்.

இங்கே பரவப்பட்டிருக்கும் கவிதைகள் என் பருவகாலத் தோட்டத்திலிருந்து பிரசவித்த குழந்தைகள். அந்தந்தக் காலத்திற்கு ஏற்றது போல் எழுதியவை, அவைகளைத் திருப்பித் திருத்தி வாசித்துப் பார்த்த போது எனக்கு நானே இரகசிய இரசிகனானேன். இக்காலத்திற்கு ஏற்றதுபோல் சில கவிதைகளை மாற்றியும் அமைத்திருக்கிறேன்.

உண்மைகளை உள்வாங்கி எழுத வேண்டும் என்கிற உணர்வு என்னை தூண்டிவிட்டு எழுத வைத்திருக்கிறது. சில கவிதைகள் இங்கே அந்தப் பாதிப்பால் பதிவானது தான். அதைப் படித்துப் பார்க்கும் வேளை சிலருக்குப் பாராட்டத்தோன்றளாம், சிலருக்கு கோபத்தைத் தூண்டளாம்.

புரட்சிக்கவிஞர் காசி ஆனந்தன் அவர்கள் சொன்னதை எழுதி முடிவுக்கு வர நினைக்கின்றேன் "எழுதவேண்டிய விடையத்துக்குள் முதலில் தொலைந்து போ அங்கிருந்து உண்மையை மட்டும் வெளியே கொண்டுவா" இது அனைத்து எழுத்தாளருக்கும் பொருந்தும். நன்றி

அன்புடன்
வயவை லம்போ

# வயாவிளான் மக்கள் ஒன்றியம்
## -பிரான்ஸ்-

Association Du Peuple De Vayavilan - France
Reg N°: W931013968

## வெளியீட்டுரை

சொல்லடியால் கவியுலகை கட்டிப்போட்ட கவிஞர் பிறந்து வளர்ந்த ஊர். வந்தாரை வாழவைக்கும் எங்கள் வயவை மண்ணில் வந்துதித்த கவிமுத்து வயவை லம்போ என்னும் இளங்கவிஞர். தமிழ்பேசும் உலகிற்கு ஆக்கியளித்திருக்கும் நான் உறங்கிய தொட்டில் என்னும் கவிதை நூலை வெளியிட்டு வைப்பதில் வயாவிளான் மக்கள் ஒன்றியம் பிரான்ஸ் பேருவகையும் பெருமிதமும் கொள்கிறது.

திரு சுப்பிரமணியம் லம்போதரனின் தாய்மனை எங்கள் ஆசுகவி கல்லடி வேலன் குந்தியிருந்து கவிவடித்த கல்லுக்கு மிகஅருகிலே இருந்ததால் என்னவோ இயற்கையான கவித்தன்மை அவருக்குள்ளும் ஊற்றெடுத்திருக்கிறது. இந்தக் கவியூற்றுக்கு அவருக்குத் தெரியாமல் வரம்பிட்டு வாய்க்காளால் வழிவிட்ட பெருமையை அவர் இளவயதில் கல்விபெற்ற ரோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையும், வயாவிளான் மத்திய மகா வித்தியாலயமும் பெற்றுக் கொள்கின்றன.

இவரது கவியூற்றுக்கு தடாகம் அமைக்கத் தளம் கொடுத்த நாடு யேர்மன் தேசமாகும் அவர் நிலமான வயவை மண் பலாலி இராணுவமுகாமின் முற்றமாக இருந்ததால் இவர் தனது பதின்மூன்றாம் அகவையில் புலம்பெயர்ந்து யேர்மன் தேசத்திற்கு வந்து சேர்ந்தார்.

ஆனாலும் அவர் மண்ணின்மேல் கொண்ட காதல் குறையவில்லை என்பதை பாடல்கள் மூலமாயும் முதல்வெளியீடான செங்கதிர் எனும் குறுங்கவி நூல் மூலமாயும் காட்டி நிற்கின்றார்.

இப்படைப்பாளி சமகாலத்தில் படைக்கவுள்ள நான் உறங்கிய தொட்டில் எனும் கவிதைநூல் இவற்றுக்கெல்லாம் மகுடம் வைதாற்போல் தாய்நிலம் பற்றிய எண்ணக் குமுறல்களை புடம் போட்டுக் காட்டுகிறது. இது போன்ற நல்ல நூல்களை வயவை லம்போ படைத்துத் தமிழ்உலகிற்குத் தரவேண்டும் என்று வேண்டியும் வாழ்த்தியும் நிற்கின்றோம்.

வயாவிளான் மக்கள் ஒன்றியம்
-பிரான்ஸ்-

**தமிழ்மன்றம் பிராங்பேர்ட்**
கலை, கலாச்சாரம், விளையாட்டு
Tamil Manram Frankfurt e.V.
Kunst, Kultur und Sport
Reg.Nr. 9746

## நினைவுகளால் தாலாட்டும்

புலம்பெயர் மண்ணில் தமிழ் எழுத்தாளர் அருகிவரும் தருவாயில் வயவை லம்போவின் கன்னித்தொகுப்பாக தை 2007ம் ஆண்டு செங்கதிர் உதித்தது, அவை குறுங்கவிதைகளாக இருந்தாலும் நறுங்கவிகளாக இருந்ததென்பதே உண்மை. கவிகளோடு மட்டும் இவரது கலைப்பயணம் நின்றுவிடாது, பாடலாசிரியராகவும் வானொலி அறிவிப்பாளராகவும் இருந்த ஆற்றலை நாம் அறிவோம். தேசத்தை பிரிந்த சோகமும் அங்கே தீர்க்கப்படவேண்டிய தேவைகளையும் நவரச உணர்வோடு தீந்தமிழ்க் கவிகளாகப் படைத்துப் பதிவுசெய்ததை எண்ணி நாம் வாழ்த்துகிறோம்.

உங்கள் ஏக்கம்தான் ஒட்டுமொத்த தமிழினத்தின் எதிர்பார்ப்பும். இவரது இரண்டாம் கவித்தொகுப்பாக இந்த நான் உறங்கிய தொட்டில், எனும் கவித்தொகுப்பு பிரசவமாகிறதை எண்ணி தமிழ்மன்றம் வாழ்த்துகிறது. தலைப்பை உச்சரிக்கும் போதே தாய்மண்ணில் தலைசாய்த்து உறங்கத்துடிப்பது நன்றாகவே புலப்படுகிறது. புலத்தில் வாழ்ந்தாலும் தாய்மொழியை மறவாது தமிழைச் சுவாசிக்கும் இவரது வேட்கை வரவேற்கத் தக்கதும் உடன் அவசியமானதும் கூட.

மொழி அழிந்தால் இனம் அழியும் என்ற இந்த உண்மையை இன்றைய தலைமுறையும் உணர வேண்டும். இதை உணர்ந்து உணர்த்தும் இக்கவித் தொகுப்பை எம் இளைய தலைமுறையும் விரும்பிப் படிக்கும் வகையில் வந்தடையும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு. விடுதலை, காதல், மற்றும் தாயக ஊரான நினைவுகள் அவரவர் ஊர்களுக்கு அழைத்துச் செல்லும் வகையில் இங்கே பதிவாகியிருப்பதைக் காண முடிகிறது.

உண்மையை உள்வாங்கி அதன் வலியை வெளிப்படுத்தும் கவிதைகள் இந்த நான் உறங்கிய தொட்டிலில் நாணயமாக பதிவாகியிருக்கிறது. இக் கவி நூல் எம் இளைய தலைமுறைக்கு வழிகாட்டியாக அமையும் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

வயவை லம்போவைப் பற்றி இன்னொரு விடயத்தையும் இங்கே பதிவுசெய்யவேண்டிய கடமை எமக்குண்டு. கடந்த ஆண்டு தமிழ் மன்ற கவியரங்கில் இவரது கவித்திறன் கண்டு மன்றமே மகிழ்ந்தது. வயவை லம்போவின் ஆக்கங்கள் தமிழ்நாதத்திலும் வெளிவரவேண்டும் என்பது தமிழ்மன்றத்தின் வேண்டுகோள். நான் உறங்கிய தொட்டில் எனும் இக்கவிதைத் தொகுப்பு எங்கள் வாசகர்பரப்பை வெற்றிகரமாக வந்தடைய வாழ்த்துக்கள். எங்களையும் நினைவுகளால் தாலாட்டும் என்பது நிதர்சனம். இவை போல் இன்னும் பல கவித்தொகுப்புகளை நீங்கள் பிரசவித்து புகழோடு கலையுலகில் நீங்கள் கோலோச்சவேண்டுமென பிராங்பேர்ட் தமிழ்மன்றம் உங்களை உளமார வாழ்த்துகிறது....

தமிழ்மன்றம் பிராங்பேர்ட்

**தமிழ்க் கல்விக் கழகம் பிராங்பேர்ட்**
Tamilischer Bildungsverein Frankfurt e.V
Tamilalayam Frankfurt-1995
Sprache, Bildung, Kultur und Sport

# உள்ளத்தைத் தொடும்

யேர்மனிய மண்ணில் பலராலும் நன்கு அறியப்பட்ட இளம்கவிஞன் லம்போதரன் சுப்பிரமணியம் அவர்கள் மீண்டும் நான் உறங்கிய தொட்டில் எனும் கவிநூலை வெளியிடுவதையிட்டு மகிழ்வுடன் கூடிய வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம். இரண்டாயிரத்தேழாம் (2007) ஆண்டு இவரால் புனையப்பட்ட செங்கதிர் எனும் குறும் கவிதை நூலை சர்வதேச புலம்பெயர் தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்துடன் இணைந்து வெளியிட்டிருந்தார்.

அந்த நூல் பலரின் பாராட்டைப் பெற்றது. நிஜமான புகைப்படங்களை அதில் பதிவாக்கி அக் கவிதைகளுக்கு உண்மையான உருவத்தைக் கொடுத்து தாயகத்தின் தாகத்தையும் அது கொண்டுள்ள தாக்கத்தையும் அதில் வெளிப்படையாகச் சொல்லப்பட்டிருந்தது. அதில் காகக்கூடுகள், மைனாக்கூடுகள், தூக்கணாம்கூடுகள் தாயகத்தில் இவைகளை விட அதிகம் காண்பது தமிழினத்தின் எலும்புக்கூடுகள் இந்தக் கவிவரிகள் எல்லோரையும் ஒருகணம் சிந்திக்க வைத்தது என்றால் மிகையாகாது.

தற்போது படைத்துள்ள நான் உறங்கிய தொட்டில் எனும் கவிநூல் மாறிவந்த நூற்றாண்டுகளில் எம்மினம், மொழி, மண், களம், காதல், குடும்பம், உறவு, இலட்சியம், கிராமம், இவற்றுள் நேர்ந்த மாற்றங்களையும் தடுமாற்றங்களையும் ஓடும் ஓட்டத்தில் உணரலாம்.

என்னதான் எம்சமூகம் அழிவுகளுக்குள் அகப்பட்டு அழியப் பார்த்தாலும் மனிதகுலத்தின் தனிப்பெரும் பலமான அறம் காப்பாற்றப்படுவதற்கு இவரின் கவிவரிகள் கொஞ்சம் பாடுபட்டிருப்பதைக் கண்டு கொள்ளலாம். எந்த ஒரு படைப்பிற்கும் அதற்கு உரிய தனியழகு ஒன்று இருக்கும். நூலை வெளிக் கொண்டு வந்திருக்கும் விதம் விடயம் சார்ந்த நுண்ணிய அறிவு அதனை நடைமுறைப்படுத்த எடுக்கும் கடுமையான முயற்சி ஆகியவை அந்த படைப்பினை சிறப்புற நிறைவு செய்வதற்கு மூலகாரணிகளாக அமைகின்றது.

ஒரு நூலைச் சிறப்புற கொண்டு செல்வதற்கு அந்நூலில் பயன்படுத்தப்படும் சொல்லாடல் முக்கிய பங்கை வகிக்கின்றது. நாம் சொல்ல வந்த கருத்துக்களை சொல்நயத்துடனும் கருத்துப்பிறழ்வின்றியும் இலகுசொல் நடையுடன் எடுத்துக் கூறுவது நூலின் சிறப்பை உயர்த்தும்.

அந்தவகையில் இன்நூலில் சிறந்த சொல்லாடல், சொல்நயம் ஆகியவைசிறப்பாக கையாளப் பட்டிருக்கின்றது. ஒரு நூலைப் பார்த்த மாத்திரத்திலே அதனை மிளிரச் செய்வதற்கு இரண்டு முக்கிய அம்சங்களை எடுத்துக் கூறலாம்.

ஒன்று அந்நூலின் தலையங்கம். இரண்டாவது அதன் அட்டை வடிவமைப்பு இவை இரண்டும் அந்நூலின் உயர்வு பற்றி வாசகர்களிடையே தனியான ஒரு கவர்ச்சியை கொண்டுவருவன. அந்த வகையில் இந்த தலைப்பு எடுத்தவுடனேயே அனைவரின் உள்ளத்தைத் தொடும் அளவிற்கு அமைந்துள்ளது.

அட்டைவடிவமைப்பு இந்நூலை மேலும் ஒருபடி மெருகூட்டுகின்றது. இனிது படித்து உணர்ந்து உவகை கொள்ளும் வகையிலும் உள்ளத்தை கவ்வும் பாங்கிலும் எதுகையும் மோனையும் சீரையும் தளையையும் சீராகக்கொண்டு படைக்கப்பட்ட இக் கவிநூலை தான் பிறந்த ஊரான வயாவிளானில் பிறந்த ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளைக்குச் சமர்ப்பணம் செய்துள்ளமையானது இவரது கவிப்பற்றை எடுத்து இயம்புகின்றது. வயாவிளான் மக்கள் ஒன்றியம் நடாத்துகின்ற வெளியீட்டு வைபவம் சிறப்புற நடைபெற, கவிஞரின் படைப்புப்பணி மென்மேலும் உயர தமிழ்க்கல்விக்கழகம் பிராங்பேர்ட் நெஞ்சார வாழ்த்துகின்றது.

தமிழ்க்கல்விக்கழகம் பிராங்பேர்ட் யேர்மனி


# தொட்டில் பக்கம்


| | |
|---|---|
| புரட்சி | 13 |
| எழுச்சித் தமிழா | 16 |
| இசைப்பிரியா | 17 |
| ஏழுமாதக் கர்ப்பிணிப்பெண் | 20 |
| சிங்களத்தில் தமிழ்மருமகள் | 23 |
| தேடித் தேடி | 26 |
| இவை தான் நான் கேட்பது | 30 |
| அந்த நாட்கள் எங்கே? | 34 |
| வெளியே நிற்கிறோம் | 37 |
| வெள்ளை | 39 |
| புலம் பெயர்ந்த காதலர்கள் | 40 |
| அவள் | 42 |
| பருவத் தேடல் | 43 |
| சித்தவாசி | 45 |
| தந்தை மகனுக்கு ஆற்றும்... | 47 |
| சாந்தியப்பா | 49 |
| என்னாச்சு? | 52 |
| தமிழாலயமே வாழி... | 55 |
| சின்னச்சின்னத் தொட்டில்கள் | 56 |
| பொய்யே! | 57 |
| வீறு கொண்டவன் | 59 |
| சிலுவை | 61 |
| சின்னச் சின்ன தொட்டில்கள் | 63 |
| பூண்ட போர்கோலம் மாறாது | 64 |
| இது எங்கள் தேசம் | 66 |
| சிறைச்சாலை | 68 |
| புலம் வாழ் இளம் தமிழனே | 82 |

## தொட்டில் பக்கம்


| | |
|---|---|
| பிரசவவேதனை | 71 |
| கப்டன் மில்லர் | 75 |
| வேங்கைகள் சரிதம் | 77 |
| வெளிநாட்டுச் சிறையில் | 80 |
| நான் உறங்கிய தொட்டில் | 84 |
| வீரத்தொகுப்பு | 88 |
| உரிமைப்போர் | 90 |
| வாழும் நாளில் | 92 |
| என் வீட்டு வளவு | 94 |
| ஒரு கிராமத்தின் ஏக்கம் | 97 |
| பருவம் பதினாறு | 101 |
| என் எதிர்காலத் தோழனுக்கு | 104 |
| உண்மையொன்று ஊமையாகிறது | 106 |
| அணைந்தது தீச்சுவாலை | 110 |
| கூவிய குயிலுக்கு குண்டடியா? | 112 |
| இது மருத்துவமல்ல | 115 |
| இந்தத் தாகம் அடங்காது | 117 |
| நன்றி வணக்கம் | 118 |

## ஆசுகவி
# கல்லடி வேலுப்பிள்ளை



**1860 - 1944**

உன் கல்லின் அருகில்
என் இல்லம் - புலவா
நின் கவி யாவும் வெல்லம்
தான் கட்டிய தொட்டிலில்
நான் உறங்கியவன்
நான் உறங்கிய தொட்டிலை
தமக்குச் சமர்ப்பிக்கிறேன்.

# புரட்சி...

புரட்சி நடத்து !
புரட்சி நடத்து !

பூர்வீகம் மீட்க
புதுயுகம் ஒன்று பிறக்க
எமது
தேசத்தில் தமிழ்
ஆட்சி நடத்த...

புரட்சி நடத்து !
புரட்சி நடத்து !

அடுப்படியை விட்டு
வெளியே வந்து
பெண்ணினம் நீயும்
புரட்சி நடத்து!

தேசத்து நினைப்பின்றி
தெருவோரம் நிற்கும்
ஆணினமே நீயும்
தேசம் மீட்கும்
போரில் துடித்தெழுந்து
புரட்சி நடத்து !

பிறந்த தேசம் எமதாக
பரந்து வாழும்
பரதேசிகள் மாழ

எழுந்து வந்து
புரட்சி நடத்து !

புயலோடு பூகம்பமாய்
விழியோடு தீப்பந்தமாய்
இடியுடன் மின்னலாய்
வழி பார்த்து நடை போடு
வந்த பகை ஓட...

செத்தவர் மீதிலுமோர்
சத்தியம் செய்து
புரட்சி நடத்து
சூரியசக்தி கொண்டு
வீரியஉணர்வோடு
குடி காக்க இனம்
நீயும் புரட்சியுடன்
புறப்படு

வாழ்வா ? சாவா ?
போரின் முடிவில்
காண்போம்
வாடா தமிழா !

யுத்தப்பறை தட்டி
சூரியனை பிடி எட்டி
எந்தப்பகை வருகினும்
அந்தப் படை அழிய
புரட்சி நடத்து

நிற்காதே கை கட்டி
அடங்காதே தலையாட்டி
மிரண்டெழு புலியாகி
விரண்டோடட்டும் எதிரி
எலியாகி...

வெட்டொன்று
துண்டு இரண்டென
பட்டென்று படை நடத்தி
பாய்ந்து வா
புரட்சித் தீ கொளுத்தி

தேசத்தின்
நலன் கருதி
தேவையின்
பொருள் அறிந்து
போராட வா துணிந்து

புலமையைத் தீட்டி
புரட்சியுடன்
புலிக்கொடி எடுத்துத்
தமிழன் வீரத்தை
நிலை நாட்டு

புரட்சி நடத்து !
புரட்சி நடத்து !

## *எழுச்சித் தமிழா!*

இந்துமா சமுத்திர ஓரம்
இருளான தமிழனின் தேசம்
இனவாத அரசால் இன்று
இருண்டதன் சோகம் கேளும்

கனவில் கூட அவலச் சத்தம்
கண்ணில் கூட சுரப்பது இரத்தம்
காற்றில் கூட நஞ்சின் நாற்றம்
கறுப்பு வெளுப்பது எந்தக் காலம்

பட்டினிப் பேய்கள் எம்மைத் தாக்கும்
குடிநீர் கேட்டே உயிரும் போகும்
கட்டிய வேலியை கறையான் தின்னும்
வெட்டியே கயமை எம்மை முடிக்கும்

சிங்களம் புரியும் கொடுமையின் யுத்தம்
சீறியே பாய்கிறது தமிழனின் இரத்தம்
சீரழிந்து போகிறது எங்களின் காலம்
சிதைந்தது தேசம்... சிவந்தது தேசம்....

கொடூரத் தீயில் எம் தேசஇருப்பிடம்
வீதியெங்கும் தமிழனின் பிணம்
விடுமுறையில்லா கண்ணீர்ப் பயணம்
நிமிரமுடியாது முதுகில் இனவாதக்கனம்

அடிமைச் சேற்றில் புதைந்த வாழ்க்கை
அகதியென்ற பெயர் புனைந்த வாழ்க்கை
அனைத்தும் போதுமடா எழுச்சித் தமிழா
ஆள்புலம் பிடித்து ஆள்வோம் வருவீர்களா...

# இசைப்பிரியா

சிங்களத்து மன்னனே! தமிழரை
அழிக்கப் பிறந்தவனே! இந்த
மங்கள மங்கை என்னை உன்
மானம் கெட்ட படை சிதைத்ததே
இங்ஙனம் என்னடா நான் செய்தேன்
இனவாதச் சூரனே எளியவனே
எங்ஙனம் போய் இவள் நியாயம்
கேட்டு மீண்டு வருவேன் சொல்

பெற்றவளை தப்பவிட்டு - உடன்
பிறப்புகளை தூரத் துரத்திவிட்டு
உற்றவரோடு ஒருத்தியாய் இருந்தே
மக்களுக்கு உதவிடவே நின்றேன்
முற்றமெல்லாம் குண்டுகள் வந்துவீழ
முல்லிவாய்க்கால் திசை நோக்கினேன்
சுற்றி வந்த இராணுவத்தின் கரத்தில்
சிக்கினேன் சின்னாபின்னமானேன்

பிரபாகரன் மகளென்றே எனை வினாவ
ஐயோ அது நான் இல்லை என்றேன்
பரவாயில்லை வெள்ளைச்சீலை போர்த்தார்
மானம் காப்பார் என்றே எண்ணினேன்
தரதரவென்று எனை இழுத்துச் சென்றார்
கேள்விகள் பல கேவலமாய்த் தொடுத்தார்
மரணபயம் வந்தது மனதில் - நின்று
மன்றாடினேன் விட்டுவிடக் கெஞ்சினேன்

செவி கொடுப்பார் எவருமில்லை பாவம்
 பேதையிவள் என்று சொல்ல யாருமில்லை
புவிமேடை தன்னில் எமக்குப் புரிகின்ற
 கொடுமை கணக்கில் இல்லை - இங்கே
கூவி அழுகின்றேன் கொடியவனே - உன்
 ஆமியின் அக்கிரமம் தாங்க முடியவில்லை
தவித்து வேதனையோடு துடிக்கின்றேன்
 முடியாது! சுடுங்கோடா நான் சாகின்றேன்

யானைக்குப் போட்ட கரும்பாய் - என்
 அங்கம் கிழித்துப் புசித்தாரே - ஒரு
மானை வேட்டையாடச் சுற்றி எத்தனை
 சிங்கங்கள் நின்றது தெரியுமோ
வானைக் கிழித்து என் குரல் அழுது
 ஓலமிட்டுப் போக அந்தோ தரையில்
மீனாய்த் துடித்தேன் ஐயோ விழுந்தேன்
 முடியாது மனம் மயங்கிக் கிடந்தேன்

விட்டாரா என்னை பின்னே கைகள்
 கட்டிவிட்டு நின்று எட்டி உதைத்தாரே
தொட்டாரே மேல் இருந்து கீழ்வரை
 வெந்தேனே வேண்டாம் சொன்னேனே
கேட்டாரா உன் கயவர்கள் இல்லையே
 ஆடினாரே வெறியாட்டம் அநியாயம்
கூட்டமாய்க் கூடி வந்து ஈனப்பிறவிகள்
 இரக்கமின்றி இரத்தம் குடித்தாரே

மனிதத் தாய் இவர்களைப் பெற்றிருந்தால்
 பெண்கள் இங்கே பிழைத்திருப்போம்
புனிதமான புத்தரை வணங்கியிருந்தால்
 காயங்கள் இன்றித் தப்பியிருப்போம்
கனிவான சிங்களத்தளபதிகள் இருந்திருப்பின்
 கன்னிகைகள் கவனமாய் வந்திருப்போம்
இனி என்னாகும் எந்தன் கெதியென்று
 உள்மனசு சொல்ல உயிர் நரம்பறுந்தது

பண்பான தாய்நாட்டின் தரத்தோடு
 இவள் கற்பினையும் சிதைத்தார்
மண்ணோடு ஒட்டியிருந்த மரியாதையை
 நஞ்சு கலந்த காற்றோடு விட்டார்
என்னோடு எத்தனை பெண்கள் பாரடா
 இவர்களை எவர் மீட்டுச் செல்வார்
கண்ணோடு கடவுள் மண்மீது இருந்தால்
 மீதி இசைப்பிரியாக்களைக் காப்பாற்றுவார்

கொடியவனே உன் கொட்டம் அடக்கப்
 போனவர் வருவார் அதுவரை ஆடு
அடிமைகள் நிலைத்துத் தர்மம் தலை
 குனிந்த சரித்திரம் உண்டா கூறு
வெடித்துப் போனவர் மறுபடியும் வந்து
 வேட்டையாடுவார் நரகனே நம்பு
அடித்து! உன் பரம்பரையை அழிப்போம்
 இது இசைப்பிரியாவின் சத்தியமடா..

# ஏழுமாதக் கர்ப்பிணிப் பெண்

கணவனைத் தேடி நானும்
   தெருவெல்லாம் அலைஞ்சேன்
மணவாளனைக் காணாமல்
   பொட்டிருந்தும் விதவையானேன்

விடியப் போனவர் தான்
   இன்னும் விழியில் தெரியவில்லை
முடியாமல் இருக்குதையா-எனக்கு
   மூச்சுமுட்டி வாங்குதையோ

நாலுபேரைக் கேட்டேன்
   நல்ல பதில் தரவில்லை
காலும் ஓஞ்சு போச்சு
   என்னவர் தான் வரவில்லை

ஏங்கி மனமது அச்சத்தோடு
   அடங்காமல் அடம் பிடிக்குதே
தூங்கிட விழிகள் மறுத்து
   தெருவாசலைப் பார்க்கிறதே

உறவெல்லாம் கூடிவந்து
   ஏதேதோ உளறுதுங்கோ
சிறகொடிந்த பறவையாய்
   என் உயிர் உணருதுங்கோ

ஆமியைக் போய்க் கேட்டால்
   விபரமேதும் தெரியுமென்று
சாமியைக் கும்பிட்டு நானும்
   போனேன் பார்ப்போமென்று

ஏழுமாசக் கர்ப்பிணி நான் -ஐயா
 என் கணவரைக் காணவில்லை
ஏழு எட்டு இடங்கள் தேடியும்
 எங்கும் அவர் கிடைக்கவில்லை

பாவியிவள் ஓடோடி வந்தேன்
 கும்பிட்டுக் கேள்வி கேட்டேன்
புவியில் என் புருசன் எங்கே
 என்று சொல்வீரோ ஐயா?

அழுது குழறி நானும் நடுச்
 சாலையோரம் விழுந்தேன்
கழுகுகளின் கூடாரம் விட்டு-பின்
 உயிர் நோக வீடு நடந்தேன்

எப்படி இனி என் வாழ்க்கை
 நகருமென்று நான் அறியேன்
இப்படியே மரணம் வந்தால்
 அதை ஏற்கத் தவறேன்

மூன்று மாசம் போன பின்னே
 என் பிள்ளை வந்து பிறப்பானே
மூன்று மாசம் ஆன பின்னே
 தந்தையவர் வந்து நிற்பாரோ

சொந்தம் பல சுற்றியிருந்தும்
 சோகம் மட்டும் மொய்க்குதே
பந்தம் ஒன்று போன திசை
 அறியாமல் குங்குமம் கரையுதே

பெண்ணாய்ப் பிறந்த பாவம்
   என்னை வந்து சேர்ந்ததோ - ஈழ
மண்ணான மனிதரெல்லாம்
   சாபம் வாங்கிப் பிறந்தாரோ?

காலையிலை காக்கியுடைக்காறர்
   ஆமியோடு வந்தார்கள்
சாலையில் நாலுபேர் நிற்க - உள்ளே
   வந்து என்னை இழுத்தார்கள்

அடித்து என்னை அதட்டிக்
   கதைத்துத் துன்பம் தந்தார்
பிடித்து என்னை ஜீப்பில்
   ஏற்றிக் கொண்டு போனார்

துடித்து நானும் கத்தி அழுதேன்
   விழி நீரில் குளித்தேன்
துடித்தது என் குழந்தை ஐயோ
   திடுக்கிட்டு உதைத்தது

அடிவயிறு நொந்தது அம்மா
   அநியாயம் நடக்குது - என்
மடியாட வேண்டிய பிள்ளை
   மரித்து மண்ணில் விழுந்திடுமோ

அச்சமது அடியிருந்து நுனிவரை
   ஆழ வேரூண்டி விட்டது
மிச்சமில்லை இனி நானென்று
   ஊரும் முணுமுணுத்தது

# சிங்களத்தில் தமிழ்மருமகள்

சின்னவயசுக் காதலன்டி
சின்னம்மா பெத்தமகன்டி
சொன்னதெல்லாம் செய்தேன்டி
சொந்தமென்று நினைச்சேன்டி

கெலி சுத்தி அடிக்கையிலை
வீட்டு உறவை மறந்தவன்டி
உன் உயிரைக் காப்பாற்ற
சயிக்கிலில் பறந்தவன்டி

உறவென்று உன்னை எண்ணி
உணர்வோடு சேர்த்து வைத்தேன்
உள்ளத்தில் குண்டை வைத்து
உத்தமியாய் போறவளே

கொல்ல வந்தவனை நீ
கணவனாக்கிக் கொண்டு
கொழும்புக்குப் போகிறியே
கொல்லாமல் கொண்டுபோட்டியே

விடுதலை வேள்வியிலை
நான் இணைய இருக்கையிலை
விட்டிடாதை என்னை என்று
விழுந்தழுது நின்றவளே

சாதிச் சண்டையிலை இங்கே
பல காதல் செத்ததடி
மத வேறுபாட்டால் இங்கே
பல காதல் தோற்றதடி

இனவாதச் சண்டையிலை
   ஆயிரம் உயிரை எடுத்தவன்டி
அடியே உவன் உன் கொண்ணன்
   உயிரைக் குடிச்சவன்டி

ஆயுதம் இல்லாமல் அவன்
   தூங்கியது கிடையாது
ஆயுளை அவனிடம் கொடுத்தா
   நீ வீடு திரும்ப முடியாது

கூடுவிட்டு ஒருநாள்
   ஆவி பறிபோகுமடி
கூத்தாடியின் குணம்
   வேகையிலும் போகாதடி

இவன் மனித வேட்டைக்கு
   மண்ணுக்கு வந்தவன்
எவன் சொல் கேட்டு நீ
   மணக்க முன் வந்தாயடி?

கொலைகாரக் குடும்பத்திலை
   குலமகளாப் போறபிள்ளை
கொண்ட காதல் தோற்றுப் போன
   கோபத்தில் சொல்லவில்லை

உண்டு இன்னும் உன்மீது
நான் கொண்ட நேசம்
சிங்களத்து மக்களை நாம்
வாழ்த்தியதின்றி வெட்டியதில்லை

சிங்களத்துத் தமிழ்மருமகளே
சீரும் சிறப்புமாய் வாழ்ந்திடு
கடைசியாய் ஒரு வார்த்தை
சொல்கிறேன் கேட்டுவிடு

பெற்றெடுக்கும் பிள்ளைக்கு
தமிழ்ப்பெயராய் வைத்துவிடு
தமிழீழத்துத் தமிழச்சியாய்
சிங்களத்தில் செத்துவிடு

# *தேடித்...தேடி...*

வணக்கம் தாயே
வந்திருப்பது
யார் தெரிகிறதா?

அன்னைமண்ணே!
உன்னை விட்டு
ஓடிய அந்த இளையவன்
வந்திருக்கிறேன்!

மண்ணின் மகின்மை
தெரியாத பருவத்தில்
அந்நியதேசத்தை
அணுகிய மைந்தன்
வந்திருக்கிறேன்

ஏனம்மா ?
நெற்றியில் ஆயிரம்
சுருக்கங்களுடன்
என்னை அப்படிப் பார்க்கிறாய்?

நான்தான் அம்மா!
நானேதான்!
உன் புழுதிமண்
உண்ட புன்னகைச்
சிறுவன் தாயே நான் தான்!

எங்கே அம்மா எங்கே ?
என் விழிகள் தேடும்
வழிகள் எங்கே ?

மானம்பிராய்ப் பிள்ளையார்
மணியிசை பாட
தோலைகட்டிப் புறாக்கள்
உன்னைச் சுற்றிப்
பறந்த பரவசநாட்கள்
எங்கே அம்மா ?

எங்கே என் நண்பர்கள்?
நாடு கடத்தப்பட்டு விட்டார்களா?
எங்கே அம்மா?
உடையார்வளவு உடுத்தியிருந்த
பச்சையாடை எங்கே ?

எருப்போட்டு உழவைச்சு
நாத்துக்களை நட்டுவைச்சு
வளம் கொழித்த பெரியண்ணன்
தோட்டத்து நிலமெங்கே ?

அந்தி கசங்கும் முன்னே
தலைமேலை புல்லுச் சுமந்து
தரையோடு ஆடுமாட்டைச்
சாய்த்துச் சென்ற அந்த
அன்னக்கிழவி எங்கே?

ஆடிவிளையாடிய
கோயில் வீதிகள் எங்கே?
சுகமான காற்று வேண்டிய
ஆலமரப் படுக்கை எங்கே?
அப்பு நட்டுவைச்ச
அரசமமும் தான் எங்கே?

கோழி கொக்கரிக்க
சேவல் கூவ
ஆடுமாட்டுச் சத்தம்
காதில் சங்கீதம் வார்க்கும்
அந்த ஆடாலை
அபிமானிகள் எங்கே?

அந்தியின் அழகைக் காட்டும்
அந்த நொங்கோட்டியின்
திசை எங்கே?

துரையர்கடை வீதி எங்கே?
வீதிக்கு அங்காலை
கடந்தால் வரும் சாலம்பாய்ச்
சோலை எங்கே ? கல்லுமொண்டிச்
சுடலை எங்கே ?

நாமெல்லாம் நாளெல்லாம்
பேசி மகிழ்ந்த
சொந்தங்கள் எங்கே?

என் வீட்டுமுற்றத்தில்
கூவிய குயில்கள் எங்கே?
விட்டத்தில் தொங்கிய
தூக்கணாம்கூடு எங்கே?

குறுக்குக்கட்டிக்
குளித்த குமரிகள் எங்கே ?
கூடி விளையாடிய அந்தக்
குழந்தைகள் எங்கே?
குட்டிநாய்கள் எங்கே- அந்தக்
குடிகாறப் பேச்செங்கே?

எனக்கு ஆரம்பக்கல்வி தந்த
வடமூலைப்பள்ளி தான் எங்கே?

இந்த இடத்தில்தான்
அந்தக் கல்லு இருந்ததே
எங்கள் ஊர்ப்புலவனின்
வரலாறு சொல்லுமே
அது எங்கே?

பேசு! தாயே பேசு!
வந்தோரை வரவேற்கும்
என் வயவைத்தாயே
உன் வாசல் தான் எங்கே?

வந்தபிள்ளை இருந்து
அழுதுவிட்டுப் போவதா?

வெந்தபுண்ணை
ஆற்றிடவே
காற்றும் இங்கே
வீசாதா?

எங்கிந்தோ ஒரு குரல்
என்னை அழைத்தது
அது நான் உன் அன்னை
வயவை என்றது!

கேள்விக்கு விடைகள்
விரைவில் வருமென்றது!
மௌனம் ஒன்றே தற்போது
நன்மையென்றது!

# இவை தான் நான் கேட்பது...

ஐந்துமணிக்கு
கோயில்மணி ஓசை
விடிந்ததும் சுகமாய்
வீசும் காற்று
பல் துலக்கக் கரி
முகம் கழுவக் கிணற்றுத்
தண்ணி

மாடுகளோடு
பேசும் கிழடுகள்
பசுவின் மடி தடவும்
தாயின் விரல்கள்
எட்டுமணிப் பூசைக்கு
நடக்கும் ஊரார்

தோட்டத்தை நோக்கி
விரையும் விவசாயி
புல்லுப் பிடுங்கப்
போகும் பெண்கள்
மெசின் இறைப்பில்
கோமணக் குளியல்

இவைதான் நான் கேட்பது !

சில வீடுகளில்
சிரிக்கும் சத்தம்
சில வீடுகளில்
அழும் சத்தம்

நுங்கு உள்ள பனை
இளநீர் உள்ள தென்னை
குலை தள்ளிய வாழை

நேரத்துக்கு
சமூகமளிக்காத
பேரூந்துகள்
பள்ளிக்குப் போய்வரும்
மாணவர் கூட்டம்
நேசறி வாசலில்
கேட்கும்
ஆரம்ப எழுத்துகள்

இவைதான் நான் கேட்பது

ஒரு தெருவில்
பந்தடிக்கும் பெடியள்
மற்றத்தெருவில் கிளித்தட்டு
விளையாடும் பெண்கள்
ஒரு பக்கம் குண்டு
விளையாடும் குழந்தைகள்
மாலைப் பொழுதில்
பிள்ளைகள் பெயர்
சொல்லிக் கத்தும்
அம்மாக்கள்

எங்கோ தொலைவில்
ஐஸ்பழ வானின்
பாடல் ஒலி

ஐந்துசதத்திற்கு
தோடம்பழ இனிப்பு
கோயில் சப்பரத்துக்குக் கீழே
குட்டித் தூக்கம்

உடன் கள்ளடிக்க
அண்ணார்ந்து பார்த்தபடி
பழசுகள்
இரவுத் தெருவில்
குடிகாரர் பாடல்
குரைக்கும் நாய்கள்

இவைதான் நான் கேட்பது

கோயில் திருவிழாக்கள்
தேருக்குள் காதலர்கள்
கச்சான் சுருளை
களவாடும் பெடியள்
இருட்டுக்குள் நின்று
வெருட்டும் மனிதப் பேய்கள்

வாசிக்க உதயன் பத்திரிக்கை
சுவாசிக்க ஆலமரக் காற்று
அரசியல் பேசும் படித்த மேதைகள்

ஓரிரு கல்யாணவீடுகள்
சாமத்தியச் சடங்குகள்
வீடுகுடி பூரல்கள்
பொழுது போகக்கடை வீதி
பொழுதுபட்டால்
வந்து சேர வீடு

இவை தான் நான் கேட்பது

சோறு போட அம்மா
திட்ட அப்பா
சண்டை போடச்
சகோதரங்கள்
புறுபுறுக்க நரைச்ச
நாயகன் நாயகி

பழஞ்சோறு
கடிக்கப் பச்சமிளகாய்
குரக்கன்பிட்டு
கருவாட்டுக்கறி
அவிச்ச மரவள்ளிக்
கிழங்கு
தொட்டுக் கொள்ள
சம்பல்

சுதந்திரத் தமிழீழம்
சுயநிர்ணய உரிமை
இலஞ்சம் ஊழல்
இல்லாத அதிகாரிகள்
ஐ.நா வாசலில்
புலிக்கொடி

எட்டப்பர் இல்லாத
மக்கள் !
ஆட்சி புரிய
மேதகு வே. பிரபாகரன்

இவைதான் நான் கேட்பது

# அந்த நாட்கள் எங்கே ?

தாறுமாறாய் ஓடி
விளையாடி
பிள்ளையார் கோவில்
வீதியிலை கிளித்தட்டு
விளையாடி
முற்றத்திலை குழி
தோண்டிக் கிட்டியடித்து
உய் இழுத்த
அந்த நாட்கள் எங்கே ?

தோட்டம்
துரவென்றும்
தெரியாமல்
உழுது விட்ட நிலம்
என்றும் புரியாமல்
ஓடி விழுந்து
இழுத்து இழுத்து
விண்கூவப் பட்டம் விட்ட
அந்த நாட்கள் எங்கே ?

ஊரைச் சுற்ற
வெளிக்கிட்டு கட்டிய
வேலிக்கெல்லாம்
கல்லெறிந்து
நாய் துரத்த நான் ஓட

நடுவழியே நின்று
நான் நாயைத் துரத்திய
அந்த நாட்கள் எங்கே ?

யாருக்கும் தெரியாமல்
தேருக்குள் ஒழிந்திருந்து
உப்போடு தூள்போட்டு
நண்பரோடு சேலம் மாங்காய்
நா சுவைத்து மகிழ்ந்த
அந்த நாட்கள் எங்கே ?

சிவன் கோவில் பின்னாடி
புளியமரக் கொப்பேறி
நான் உலுப்ப நண்பன்
பொறுக்க
ஆளுக்குச் சரிபாதி
சண்டிக்குள் போட்டுக்
கொண்டு சரசரக்க நடந்த
அந்த நாட்கள் எங்கே ?

என்னூர் மழையில்
நனைந்தபடி
தவளைகளின் தாவல்கள்
மத்தியிலும்
நாக்கிலியின் நெளிவுகளின்
இடைவெளியிலும்
தம்பழப் பூச்சியின்
பயணத்தின் நடுவிலும்
வெள்ளம் விளையாடி
கடதாசி ஓடம் விட்ட
அந்த நாட்கள் எங்கே ?

திருவிழாக் காலம்
எப்பவென்று காத்திருந்து
அம்மம்மாக்குழலுக்காய்
காசு சேர்த்து தவமிருந்த
அந்த நாட்கள் எங்கே ?

அம்மன் கோவில்
மணல்பரப்பில் எவனோ
எவனுக்கோ கிண்டி வைத்த
பொறிகிடங்கில் நான்
விழுந்து முள் தைக்க
வலி தாங்க முடியாமல்
கிண்டியவனை திட்டியழுத
அந்த நாட்கள் எங்கே ?

பத்து வயதிலும்
மாமியின் மடியில்
மழலையாய் உறங்கி முழித்து
தோழர்களுடன் கதைத்து
ஆலமரத்தடியில் அசந்து
தூங்கிய அந்த நாட்கள் எங்கே ?

தாயகமண்ணில் காலடி
வைக்கும் காலம்
மீண்டும் வரும் என்றே நானும்
வாழ்க்கையோடு
அடம்பிடித்து வாழ்கிறேன்
அந்த நாட்களை எதிர்பார்த்தபடி...

# வெளியே நிற்கிறோம்

வீரம் செழித்த வணங்கா மண்ணை
விலாசம் தெரியாது அழித்தோனைக்
கோரமாய்க் கொன்றே குழியில் போட்டுப்
புதைத்த இடம் மறைத்து வைப்போம்
கூரைமேலே குண்டுகள் கொட்டிவிட்டு
கொடூரத் தாண்டவம் ஆடிவைத்தவனை
தரையில் கிடத்தி கொதிநீர் ஊற்றி - அந்த
வலியின் கொடுமை தெரிய வைப்போம்

நாலுகால் பிராணிகளும் எங்கள் சொத்து
வஞ்சகனே இரக்கநரம்பு அற்றவனே
முழுநாளும் மூர்க்கமாய் முட்டி வந்து
நஞ்சு தூவி நசித்துவிட்டு மார்புதட்டி
விழுந்தது தமிழீழம் என்று பொய்ச்செய்தி
உலகுக்குச் சொல்லிடச் சொன்னாயோ
கூழுக்கு உந்தன் கால் பிடித்த அந்த
நரியை கூட்டிவந்து சாட்சி சொன்னாயோ

தாயைக் குறை சொன்னாலே தலையை
அறுத்து அடுப்படியில் போட்டபிறகு தான்
பாயைத் தட்டித் தரையில் போட்டு தூக்கம்
செய்யும் தன்மானப் பரம்பரையிடம்
வாயைக் கட்டி மெய்யை மூடிமறைக்க -இந்த
உலகோடு நீயும் கைகொர்த்து முனையாதே
தீயைச் சுமந்து நாம் திக்கெட்டும் நிற்கிறோம்
பாயும் வேளை விரைவில் வரும் பற்றுவோம்

குல்லநரிகளே உமது ஆட்சி நிலைக்குமா?
　பாறைமேட்டில் பயிர்கள் விளையுமா?
உள்ளமது ஊனமெனில் உதயமாகுமா
　சுதந்திரம் எம்மை வந்து சேருமா?
வெள்ளை இனத்தவனும் வந்து நின்று
　கொள்ளையடிக்க ஆயுதம் தூக்கினானா?
எல்லை கடந்துவந்து புரிந்த போர்க்குற்றம்
　நந்திக்கடலோடு கரைந்து தொலைந்ததா?

வெளியே நாம் நிற்கிறோம் வேட்டையாட
　வேவு பார்த்துச் சுற்றி வருகிறோம்
கிளிகள் என்றா எங்களை எண்ணினாய்
　வேட்டையாடி சிறையில் வைக்க
புலிகள் இல்லையென்று நீ சொன்னால்
　நம்பிட நாங்கள் நீங்கள் இல்லை
ஒளி ஒலியில் தலைவன் தோன்றும் காலம்
　தொலைவில் இல்லை நம்புங்கள்...!

# வெள்ளை

தோல்விகள் அவளைத்
தொட்டுத் தொடர்ந்து
போனாலும்
கேள்விகள் அவளைச்
சுற்றிச் சுட்டெரித்தாலும்

அவள்
அழுவதற்குப் பதிலாய்
அதிகம் சிரிக்கிறாள்
சினேகித வார்த்தைகளை
நேசித்தபடி
வைத்த பொட்டும்
பூவும் உதிராமல்

பருவ உணர்வின்
சிரமத்தை எதிர்த்து
அந்த சீதையின்
விரதத்தை சிக்கனமாய்
கையாண்டு காத்திருக்கிறாள்

ஆனால்
இராமர்கள் இங்கே
காணாமல் போய்
ஆண்டுக் கணக்காகி
விட்ட செய்தி
தெரியாமலே...

# புலம்பெயர்ந்த காதலர்கள்

புலம் பெயர்ந்த காதலர்கள்
புரிகின்ற காதல் தன்னை
பூமிக்குச் சொல்ல வந்தால்
பூக்கள் கூட அழுதுவிடும்

இணையத்தில் முகம் தெரியாக் காதலித்து
இளமையோ முதுமையோ முகவரி கொடுத்து
இதயத்தில் இனம் தெரியாத உணர்ச்சி கொண்டு
இவர்கள் புரிவது இலிசெயல் காதலென்று

காதல் மரபு தன்னைத் தூக்கில் இட்டு
காதலின் மகத்துவத்தைப் புதைத்துவிட்டு
கட்டுக்கடங்கா காமம் தன்னை மரியாதைக்
காதலோடு ஒப்பிட்டு களியாட்டம் நடப்பதைக் காண்

பருவம் வரும் முன்னே பாவிமகள்கள் புரியும்
பச்சைக் காதல் கர்ப்பத்தில் தொங்குதடா
பாசத்தை ஒருநாள் விலைபேசி பாவிமகன்கள்
புரியும் பரிதாபக் காதலடா புலம் பெயர் காதல்

தோல்வி கண்டால் கண்ணீர் இல்லை
வெற்றியென்றால் கொண்டாடட்டமில்லை - இது
தொடர்ந்து போகும் வாழ்கையில்லை - தொட்டு!
விட்டுப் போகும் வரை புலம் பெயர் காதலென்பேன்

கம்பன் சொல்லி வைத்த காதல் எங்கே ?
கண்ணதாசன் பாடி வைத்த காதல் எங்கே ?
கடவுள்செய்த கருணை நிறைக் காதலெங்கே?
கல்லறையில் உறங்குதடா அந்த காதலென்பேன்

உள்ளம் புண்ணாகி உயிர் நொந்து அழுகுதே
உலகெங்கும் காமம் கொண்ட காதல் நோய் உலாவுதே
உயிரை உயிர் கொள்ளும் காதல் தேவையில்லை
உன்னதக் காதல் செய்து வாழ்ந்திடுவீர்

புலம் பெயர் காதலரே புண்ணியமாய் போகட்டும்
புலரும் பொழுதில் எண்ணிய வாழ்விருக்கட்டும்
புலத்தையும் உங்கள் காதல் நோக்கட்டும்
பூமியில் உங்களால் காதல் மேன்மை அடையட்டும்

# அவள்

பல தடவை
அழுது விழுந்து
மறுத்தாலும்
மனம் விரும்பாதவனோடு
மணவாழ்க்கை

முதலிரவில் முகம்
சுழிக்காது
பெற்றவர்களுக்காக
குற்றஉணர்வோடு
முகம் குனிந்த படி

கட்டிலில் அழுது
கொண்டிருப்பது
அவள் மட்டுமல்ல
அவள் சேகரித்த
செல்லக் கனவுகளும் தான்

மரபு வண்டியில்
இறக்க முடியாத
சுமைகளோடு
இதயம் உள்ளே
கண்ணீர் கசிய
போலிப் புன்னகையோடு
பாவி வாழ்க்கை
தொடங்குகிறது....

# நானும் ஒரு பெண்

கல்யாணம் ஆகவில்லை
இனிக் காத்திருக்க
இளமையில்லை
முற்பதைத் தாண்டியாச்சு
முதிர்கன்னியென ஆகிப்போச்சு

முறையோடு முன்நூறு
மாப்பிள்ளைகள்
வாசல் ஏறி வந்தபோது

மூக்குமுழி பிடிக்கவில்லை
உயரநிறம் பொருத்தமில்லை
படிச்சது பத்தவில்லை
ஏதோதோ சாட்டுச்
சொல்லி வந்ததெல்லாம்
விலத்தி வைச்சேன்

உண்ணாமல் கொள்ளாமல்
உடலை ஊசி போல
வைச்சிருந்தேன்
முன்னாலை பின்னாலை
பல ஆடவரை
அலைய வைச்சேன்

மேலைநாட்டு மாப்பிள்ளை
மேலென்று நானிருந்தேன்
இன்று கீழை நாட்டு
மாப்பிள்ளைக்கும்
வழியின்றி வாழுகின்றேன்

தரம் நிறைந்த
மேதினி தன்னில்
ஒருத்தனுக்குத் தாரமாக
முடியவில்லை
பெத்தவளும் ஏறி
இறங்காத கோவிலில்லை

என்னைவிட இளையதெல்லாம்
அங்கை இங்கை
கைகோர்த்து நடக்கையிலை
அடி நெஞ்சு நொருங்குதடி
உணர்வலைகள் உள்ளத்தில்
உக்கிரமாய்க் பொங்குதடி

என் யாதகம் குருபகவான்
பார்வையில் படவில்லை
பக்கத்துவீட்டுக்
குருபார்வை என்மேலை
பட்டபோது குடும்பத்திற்குப்
பிடிக்கவில்லை

கூடப் பிறந்ததெல்லாம்
குடும்பத்தோடை போயாச்சு
மூன்றுமாதம் போன பின்னே
கூடிவரும் வரன் என்று சாஸ்த்திரம்
சொல்லியிருக்கு

# *சித்தவாசி...*

இப்படியொரு
இருப்பிடம் வேண்டும்
எனக்கு

இந்த உலகில் எங்கோ
ஒரு மூலையில்
மனித நடமாட்டமே
இல்லாத பகுதியில்
எனக்கொரு இருப்பிடம்
வேண்டும்

கிடுகால் மேய்ந்த
குடில் - மெழுகின்
மெல்லிய வெளிச்சம்

உறங்கத் திண்ணை
உண்ணக் கனி
தாகம் தீர்க்க
கிணற்றுத் தண்ணி

மலர்களின்
வாசனைகள்
வண்டுகளின்
ரீங்காரங்கள்
குடிலைச் சுற்றி
வெள்ளைப் புறாக்கள்
தாவும் முயல்
குட்டிகள்

அங்கே
வாசிக்கக் கவிதை
சுவாசிக்க
சுத்தமான காற்று

கொஞ்சம் மழை
கொஞ்சம் வெயில்
அப்பப்ப வந்து
போகட்டும்

தொலைபேசித் தொடர்பு
தொலைக்காட்சித் தொந்தரவு
வானொலி இரைச்சல்
எதுவும் இருக்கக் கூடாது

அரசியலின் ஆயுதச் சத்தம்
அடிமையின் அவலச் சத்தம்
துரோகத் துயரங்கள்
எதுவும் நிகழக் கூடாது

அமைதியின் அணியில்
அழகொரு வாழ்க்கை
அந்த ஆண்டவன்
அழைக்கும் வேளையில்

இயற்கைத் தாயின்
இடுக்கில் என் இறப்பு
கிடுகால் மேய்ந்த குடில்
என் கல்லறை !

# தந்தை மகனுக்கு ஆற்றும்...

வானத்தைக் கிழிக்கும்
வலிமை கொண்டு வாடா
கானத்தில் உன் பெயர்
பதிந்திட நீ வாடா
கூனிக் குனிந்திட்ட நம்
குறைகள் தீரவே
ஏணிமனிதனாய் மாறி நீ
எழுந்திங்கு வாடா

வரலாற்றை படித்து வைத்து
அதை நீ புரிந்து வைத்து
கண்ணோடு கருத்து வைத்து
முன்னேறு வெற்றி வைத்து
எவர் என்ன சொன்னாலும்
செவி கொடுத்துக் கேளாது
சிலர் உனைச் சீண்டிடுவார்
சிந்தித்து நீ விலகிவிடு

அன்போடு பண்போடு உன்முன்
ஆசையாய் வார்த்தை சொல்லி
அடிமையென மாற்றிடுவார் -ஐயா
மாட்டிடாமல் தப்பிவிடு
ஆண்ட தமிழன் செய்த தப்பை
மகனே நீ செய்திடாதை
நண்பர்கள் நாங்கள் என்று
நரிகள் கைதருவார் நம்பிடாதை

உனக்கு நீ என்றும் நல்லவனாய்
உள்ளத்தால் வாழ்ந்துவிடு
இது உத்தமர்,உத்தமி இல்லாத
பூமி - அச்சத்தைத் தள்ளி விடு
மனித சொந்தமும் பந்தமும் என்றும்
செத்தபின் தான் வந்து நிற்பார்
அதுவரை உன் முகவரி தெரிந்தும்
தெரியாதது போல் இருந்திடுவார்

பணத்தோடு வாழ்ந்திருந்தால் நீ
பரதேசி என்றாலும் வரவேற்பார்
வசதியை இழந்து விட்டால் உனை
அடையாளம் தெரியாதென்பார்
மனம் உடையாமல் என்றென்றும்
நீ தெளிவுடனே நடந்து பார்
அந்த இறைவன் உனைக் கண்டு
தன் பிள்ளை நீ என்பார்!

முறை சொல்லி அழைத்து
நீ உரிமையோடு போனாலும்
மறைமுகமாய் உனை அழித்து
மகிழ்வுடனே வாழும் உலகமடா
எவர் கையும் உனைக் காக்காது
எச்சரிக்(கை) ஒன்றே போதுமடா
நல்லவனாய் வாழ்ந்து கெட்ட
அப்பன் நான் சொல்கிறேன் நம்படா!

# சாந்தியப்பா

உன்னை நான்
ஆராதிக்கின்றேன்
சாந்தியப்பா

எந்தக் காலத்திலும்
மறக்க முடியாத
மரபுக்குள் நீ மனிதமானவன்

உன் மடிப் பாசத்தில்
பிடிபட்டுக்கிடந்தவன்
நீ இந்த பூமியின் பிடியைவிட்டு
புறப்பட்டபோது - புலன்களால்
அடிபட்டு விழுந்தவன் இவன்

சாந்தியப்பா
உன் உடல் பாராமல்
உன் முகம் பாராமல்
மெழுகு இல்லாமல்
பூக்கள் இல்லாமல்
கண்ணீரத் துளியோடு
இதோ என் அஞ்சலி

செவிகள் கேட்கும்
தன்மையை இழந்திருப்பின்
விழிகள் மாத்திரம்
கலங்கியிருக்கும்

கேட்டதால் இன்று
ஐம்புலன்களும்
அழுகிறது சாந்தியப்பா
தீட்டிய கத்தியொன்று
இதயத்தில் இறங்கியது
போல ஒரு வலி

நீ காட்டிய அன்புக்கும்
பாசத்திற்கும் பரிவுக்கும்
நீ கொடுத்து வாங்கியதற்கும்
உயிரோடு இருந்தவரை
நான் எதைச் செய்தேன்?

என் குற்றஉணர்வு
உயிரைக் குடிக்கிறது
சாந்தியப்பா - மன்னித்துக்கொள்
மனிதனாய் நான் வாழவில்லை

இந்தத் தொலைதூர வாழ்க்கை
உங்களைத் தொலைத்தே
என்னை வாழ வைத்துவிட்டது
இறந்துவிட்ட பிறகு தான்
உறவுகள் இருந்திருக்கிறீர்கள்
என்பதையே மனசு
அறிகிறது வெளிநாட்டில்

நீ உண்டு வாழ்ந்தாலும்
உண்ணாவிரதம்
இருந்தவன் போல்
உன் உடலம்

தியாகி திலீபனை
நேசிக்கும்
உன் இதயம்
அதே போல் நீயும்
படுத்த படுக்கையில்
மரணம்

நீ மீசை தாடி
முளைத்த குழந்தை
உறவென்பது
அடுப்படி விறகு போல
எரிக்கமட்டும் தான்
தற்போது தேவைப்படுகிறது

உயிரோடு செத்துக்
கொண்டிருந்த போது
தொலைபேசியில் கூட சுகம்
விசாரித்ததில்லை

நீ நிரந்திரமாய்
உயிரை விட்ட பிறகு
கண்ணீர் மேடையில்
வெறுமையாய்

என்னை மன்னித்துக்கொள்
சாந்தியப்பா - நான்
மனிதனாய் வாழவில்லை

ஓம்சாந்தி... ஓம்சாந்தி...
ஓம்சாந்தி....அப்பா

# *என்னாச்சு...?*

பள்ளி முடிஞ்சு
பொழுதாகிப் போச்சு -ஏன்டி
வள்ளியமை உன் மகள்
வந்தாளா பார்த்துச் சொல்லு

ஊரெல்லாம் தேடிவிட்டேன்
உறவெல்லாம் கேட்டுவிட்டேன்
வரும் வழி பார்த்திருந்தேன்
பள்ளிக்குப் போனவளைக் காணவில்லை

உயிர்கூடு பதறுதடி
விழியிரண்டில்
நீர் முட்டி உள்ளம் தான்
ஏங்குதடி

என்ன ஏதேன்று
நான் அறியேன் -என்
இளங்குருத்தை எங்கை
போய் தான் பார்ப்பேன்

ஏதேதோ பயம் வந்து
என்னைப் பிடிக்குதடி
அணைச்செடுத்த மார்பு
பதைபதைச்சுத் தவிக்குதடி

எனக்குச் சொல்லாமல்
எங்கேயும் அவள் போனதில்லை
ஐயோ! நான் பெத்தவளைக்
காணவில்லை

எவரிடத்தில் நான் போய்
முறையிடுவேன் - இறைவா
எவரும் இங்கு சரியில்லை
எவரிடமும் நிஜம் இல்லை

குறைபாடு கொண்ட
சூழலில் அல்லோ
நான் வசிக்கிறேன் அந்தக்
குமருக்காகத் தானே சுவாசிக்கிறேன்.

மேயப் போன மந்தைகளும்
கட்டுக்கு வந்திருச்சு
தூரப் போன குருவிகளும்
கூடு திரும்பிருச்சு

மணியடிச்சு மணித்தியாலக்
கணக்காச்சு - பள்ளிக்கூட வீதி
வெறுச்சோடிப் போச்சு -என்
மகள் வரும் வழிக்கு என்னாச்சு?

என்னங்கோ வாத்தியாரே
என்ரை பிள்ளையைக்
கண்டியளே?
பள்ளிவரை போய் வந்தேன்
படலை சாத்தியிருக்கு
ஈக் காக்கா சத்தமின்றி
அமைதியாத்தானிருக்கு

ஐயா ! அறிவில் பெரியரே
பதிலை எதிர்பார்த்தா
வெறுங்கையை
விரிக்கிறியளே

ஓரிரு மணி நேரம் கழிஞ்சா
தெருவோரம் வெளிச்சமிருக்காது
இருட்டு வந்தால் பேச்சுமூச்சிருக்காது
விடியும் வரை என் உயிர்
இருக்குமோ எனக்குத் தெரியாது

எங்கை என் பிள்ளை
என்று தேடித் தேடி
அழுதிருப்பதா - அல்லது
தாயிவள் செத்து மடிவதா

விடியாற்காலை பத்திரிக்கை
செய்தி ஒன்று சொல்லிச்சு
அதைக் கேட்ட சாதிசனத்தின்
உயிர்வேர் ஆடிப் போச்சு

ஒரு மாணவியின் உடல்
பள்ளியின் அருகில் காயங்களோடு
கண்டெடுக்கப் பட்டது
பல மாணவிகளின் எதிர்காலக்
கல்வி கேள்விக் குறியானது...

# தமிழாலயமே வாழி...

தாய்மொழி அறிவூட்டிய தரமான ஆலயமே
தன்மான இனத்தின் மொழி கொண்ட வீடே
முன்னேற்றத்திற்கு முயற்சி கொடுத்த தாயே
உயிர்மொழியதை உணர்த்தி - தமிழின்
சுவையதை எம் நாவில் இருத்தியவளே
நற்சிந்தை சிறக்கச் செய்ய வழி விட்டவளே

நீ எம்மை உன்னதமாய் உணர வைத்தாய்
பாரில் எங்கும் தமிழின் தடம் பதித்தாய்
பெருமை மிகு ஆற்றலை தாயே பெற்றாய்
கலையும் கலாச்சாரமும் கற்றுக் கொடுத்தாய்
பண்பாட்டினை பயனுற பயிற்றுவித்தாய்
பாடநூலென்னும் பாலினையூட்டி வளர்த்தாய்

ஊழியமின்றி உழைக்கும் ஆசான்கள் அங்கம்
ஊக்கத்தின் உச்சியில் நீ முத்தமிழ்ச் சங்கம்
பல்லாண்டு நீ தாண்டுவாய் என்பதென் திண்ணம்
மண்ணுலகில் நீ கல்விக் கடவுளின் வண்ணம்
கரம் கோர்த்து ஒருமை காப்பதே உன் எண்ணம்
தமிழால் உலகில் ஒன்றிடுவோம் என்பதுன் சின்னம்

எம் தரம் உயர்தியவளே நீ என்றும் வாழி
இளையதலைமுறையின் உயிரே நீ வாழி
தலைவரின் சிந்தனையில் உதித்தவளே வாழி
உலகத்தமிழ் இயக்கமே புகழோங்கி வாழி
செம்மொழியின் சிறப்பே செந்தமிழே வாழி
இரா.நாகலிங்கம் வளர்த்தவளே வாழி வாழி...

## இன்னும்

பட்டமரம் விழுந்த
சத்தம் கேட்டதும்
வானில் வட்டமிட்டது கெலி!
ஊரைச் சுற்றி வளைத்தது
இராணுவம்!

## சுதந்திரம் ?

சிங்களவன் போர் முடிந்தது
என்றான்
கையில்
துப்பாக்கியோடு!

# பொய்யே!

ஊரெல்லாம்
உறவெல்லாம் பொய்யே!
இந்த உடல் கொண்ட
உயிரும் பொய்யே!

சொல்லிடும்
உறவுமுறையில் பொய்யே!
தாய் தந்தையைத் தவிர
கடவுளும் பொய்யே!

இது மானிட
பூமியென்பது பொய்யே!
மனச்சாட்சி உறுத்தும்
என்பது பொய்யே!

அன்பென்ற சொல்லு
அநியாயப் பொய்யே!
நட்பென்ற வட்டத்தில்
நஞ்சுள்ள பொய்யே!

உதவிக்கு
உறவென்பதும் பொய்யே!
உறவு உயிர்
காக்குமென்பதும் பொய்யே!

நீதி நியாயம் பேசும்
நீதிபதியும் பொய்யே!
இங்கு நல்லவர்கள்
என்பதெல்லாம் நாடறிஞ்ச பொய்யே!

சமயம் போதித்த
சடங்குமுறை பொய்யே
கலையிலும் கலாச்சாரத்திலும்
கலந்திருப்பது பொய்யே

செய்திகள் சேகரிக்கும்
நாவிலும் பொய்யே
அதை செவிமடுத்துக்
கேட்பவரும் பொய்யே

பக்கத்தில் இருக்கும்
காதலியும் பொய்யே
பூக் கொடுத்து அணைத்த
காதலனும் பொய்யே

ஆண்டாண்டாய்
அரசியல் பேசுபவனும் பொய்யே
உண்மையை பேசனெ
சொல்பவனும் பொய்யே!

பாராண்ட தமிழா கேளடா!
பாதித்த தமிழன் செத்தது
பிறர் பொய்யை நம்பித் தானடா!

# வீறு கொண்டவன்

பண்பட்டது எம் வாழ்க்கை -பாரில்
தென்பட்டது எமது தேசம் -பின்
புண்பட்டது பார் குலமானம் -மண்
கெட்டுப் போக வந்தது இனவாதம்

கற்றிட்ட கல்வியை கைவிட்டே
களத்துப் பார்வை நோக்கினான்
முற்றிட்ட பகைப் பேய்களை -அவன்
முடித்திடவே மூர்க்கமாய் நடந்தான்

பாரிய படையெடுப்புப் போரெனப்
பொங்கி வந்த போதும் -அவன்
கூரிய பார்வையோடு கௌசல்யன்
தேசியவிடியலின் திசை சென்றான்

விழியில் விடுதலைக் கனல் மூட்டி
காரியத்தில் குறியாய் இருந்தான்
வழியில் தடைகள் பல வந்தபோதும்
தேசம் தேடியே தடைகள் மீறினான்

காலப்பெருவெளியின் சூழலிலே -தாய்
மண் தவித்திருத்தல் தான் தகுமோ?
ஓலமிட்டுத் தமிழன் மண்மடி தன்னில்
மடிந்து போதல் தான் முறையோ ?

வீறு கொண்ட நடையும் நல் பேறு
நிறைந்த தன்மான உணர்வும்
சோர்வில்லாத உள்ளமும் என்றும்
சான்றோர் புகழ்ந்திடும் சாதனையும்

எட்டப்பன் மண்ணில் தோன்றினான்
மண்ணை மலிவாக்கி இளிவாகினான்
குட்டத் தான் வேண்டும் அவனை -இன்றி
எட்டாது போகும் தமிழீழம் என்றான்

சாட்சிகள் தேடித் தேடி திரட்டி வந்து
தலைவர் கையில் ஒப்படைத்து -அதன்
சூட்சிகள் கண்டறிந்து பின்னே யாரென்று
தெரிவித்ததும் தாயகமே திகைத்தது

பார்க்கலாம் எனப் பொறுமையுடன் இருந்தவனை
துரோகத்தின் துப்பாக்கி பலிவாங்கியது
போர்க்கள வீரன் அரசியலில் தீரன் -இவன்
தானைத் தலைவனின் விசுவாசத் தோழன்

# சிலுவை

முதல் கட்டிவைத்து அடித்தார் -பின்
சிறையில் போட்டு வதைத்தார்
குனிந்து முதுகைக் கொடுத்தார் -குமரன்
நிமிரமுடியாதபடி நிமிர்ந்தார்

பொன்னானமேனி புண்பட்டுப் போனது
பொல்லாத யூதஸ் இனம் புன்னகையிட்டது
தளர்ந்த நடையோடு இயேசு நடந்தார்
முள்ளோடு கூடியமகுடம் தலையில் சுமந்தார்

இரத்தம் மண்ணில் சொட்ட விழுந்தார்
அரக்கர் சாட்டையால் தாக்க வெந்தார்
இரக்கம் காட்ட மறுத்தனர் இறைக்கு
இருந்தும் சிலுவையோடு அசைந்தார்

கொட்டும் குருதியை அவர் தொட்டுத்
துடைத்திட முடியவில்லை - கைகளை
சுற்றிப் பூட்டிய சங்கிலி விலங்கு - அவருக்கு
விட்டுக் கொடுத்து உதவவில்லை

அலைமீது நடந்து மீனவரைக் காத்தவர்
உலைமீது கொதிக்கும் கொடுமை தாங்கி
காலைத் தைத்திடும் பாறைகள் மீதேறினார்
களைத்தபோதும் கைவிடவில்லை தாங்கினார்

இருந்து கொஞ்சம் ஆயன் ஆறுதல் செய்தால்
வலிமருந்துபோல அடி சடார் என விழும்
விருந்து வைத்து உண்டு மகிழ்ந்த தேவனுக்கு
அருந்திடத் துளிநீர் கொடுக்கவில்லை

வதையைத் தாங்கிய பயணப்பாதை -இதோ
பாருங்கள் முடிவிடம் வந்து சேர்ந்தது
கடவுளின் கையுடன் காலும் ஆணி அறைந்து
கல்வாரி மலையில் சிலுவை இறங்கியது

குளங்களாகிப் போனது அன்னையின் விழிகள்
குமரனான போதும் நீ குழந்தை என் மடியில்
வாய்திறந்து ஒரு மொழி பேசு என் தேவனே
உலக வாசல்கள் தேடுது உனையே

நீ விழி திறப்பாய் என நான் மண்டியிடுகிறேன்
நீ வருவாய் என்று நானும் விழித்திருக்கிறேன்
நீயே கடவுள் அருள்வாயென நம்பியிருக்கிறேன்
நீ கூப்பிடும் வரை சிலுவையோடு தவமிருக்கிறேன்

வெள்ளியன்று சிலுவையில் மரித்த இயேசு
சொல்லி மூன்று நாளில் மீண்டு வந்தார்
மன்னன் வந்ததைக் கண்ட மரியாள் தன்
கண்ணே நம்பாது திகைத்து நின்றார்

முன்னே பிரான் முழுசாய் வந்து நின்று
அன்னையே உன் பிள்ளை தான் என்றார்
கயவர் கூட்டத்தின் காதில் செய்தி சேர்ந்தது
வந்து கடவுளின் காலைப் பற்றிக் கொண்டனர்

## பெண்

நிலவைப் போய்த் தானே
பார்த்திருக்கிறீர்கள்
நிலவு வந்து பார்த்ததில்லையே
இதோ என்னைக்
கடந்து போகிறாள்!

## இரசிகன்

பிச்சசைக்காறர்களுக்கு
நீ போடும் சில்லறைக்காக நான்
பிச்சைக்காரன் ஆகவில்லை!
சில்லறையோடு சேர்த்து
நீ கொடுக்கும் உன்
புன்னகையை இரசிப்பதற்காகவே

## தோழி

அந்த மழைக்காலப்
பொழுதில் நான்
நனைந்தபடி நடந்தேன்
நீயும் ஓடி வந்து கூடவே
நடந்தாய் நட்பென்னும்
குடை பிடித்து

# பூண்ட போர்க் கோலம் மாறாது

பாய்ந்து தாக்கும் சிறுத்தையின்
குணம் கொண்டவனே தமிழா
சாய்ந்து மண்ணில் கிடக்க நாம்
என்னடா உக்கிய மரமா
தேய்ந்து மூலையில் கிடக்க நாம்
என்ன பழைய செருப்பா
மாய்த்து வா பகையை ! எழுந்து
பறை சாற்றி வா வெற்றியை

எந்தமிழ் அன்னை நொந்தவன்
விந்தில் பெற்றவள் இல்லை
செந்தமிழர் நாங்கள் வீரத்தில்
வளர்ந்த வேங்கையின் பிள்ளை
சிந்திய குருதியில் என்றோ ஒருநாள்
ஈழம் மலரும் என்பது நம்பிக்கை
வந்த எம் பகையை வரவேற்று
வென்று நிலைப்பவர் நாம் உண்மை

கேடு கெட்ட ஒரு வாழ்வை
தமிழர் நாம் வாழ்ந்ததில்லை
கூடு விட்டுக் குருவிகள்
ஒருபோதும் அடிமையானதில்லை
பாடுபட்டுப் பாரம்பரியமாய் மண்ணை
ஆண்டு வந்த மக்களை
வீடு வாசல் இன்றி அடிமையாக்க
இங்கொரு பகைவன் எமக்கில்லை

காலம் கடந்து போனாலும்
   பூண்ட போர்க் கோலம் மாறாது
தாளம் தப்பாய்ப் போட்டாலும்
   கொண்ட பாட்டின் கருத்துத் தவறாது
ஓலம் இட்டு ஓடி ஒழிந்து நாம்
   இனியும் வாழ்ந்திடல் ஆகாது
மாளும் நிலை எமக்கு நேர்ந்தாலும்
   ஆளும் தமிழ் அகிலத்தில் தோற்காது

வானம் ஏறி நாம் வலம் வந்து
   நாடு காத்து நாம் இருப்போம்
கானம் பாடித் தாயகம் தன்னில்
   அன்பினில் கூடி நாம் சிறப்போம்
ஊனம் உற்று உரிமைப் போர் மறந்து
   நாதியற்று மண்டியிட்டு மடியோம்
மானம் தமிழரின் வாழ்வெனச் சொல்லி
   ஒன்றென எல்லோரும் அணிவகுப்போம்

# இது எங்கள் தேசம்

எம் குடி கொண்ட நாட்டில்
கொடியூண்டி வாழாது
அடியுண்டு மண்ணில்
மடியுண்டு போவதோ ?

புகை அப்பிய வானில்
பகை சூழ்ந்த தேசம் தன்னில்
பதை பதைத்து எம் வாழ்க்கை
வதை பட்டு நாசமாவதோ ?

சிந்திய கண்ணீரோடும்
சீறிய செந்நீரோடும்
தாங்கியே மண்ணில் நாமும்
ஏங்கியே வாழ்வது நியாயமோ ?

நாடு விட்டு நாடு மாறி
அகதியென்ற நாமம் சூடி
அலைந்து இனம் அழியப்
பார்த்து நிற்பது திறமோ ?

கேடு விளையப் போகுதடா
பாடுபடு போரைத் தொடு தமிழா
வீடு விட்டுப் போனாலும் - நம்
நாடு விட்டுப் போதல் முறையோ ?

விழி திறந்து வழியைத் தேடு
அழியாது தமிழினமென்று பகையைப்
பலி வாங்கி விடியலைப் பிரசவி
புலி ஒழியாதென்று உலகுக்குச் சொல்லு

உக்கிரமான வீரர் நாமென்று
தாக்கிச் சொல்லு பகை ஓட
உக்கிய மரம் அல்ல - எம்மைத்
தூக்கித் தரையில் வீசிச் செல்ல

களம் கண்டு கலங்காதவர் - நாம்
நிலம் மீட்கும் போராளிகள் - வரும்
இளம் சந்ததி வாழ்வை வளமாக்கிட
பலம் கொண்டு பகையழிக்க எழுந்தவர்

# *சிறைச்சாலை*

என் வீட்டு முற்றத்திலை
பௌர்ணமி நேரத்திலை -அந்த
வேப்பமரத்துக் கீழே உன்
பக்கமிருந்து பேசி மகிழ்ந்திட
கனவுதான் கண்டேன் என்னவளே!

உள்ளம் குமுறுதடி
உயிர் உளறுதடி
உத்தமியே உனைப்
பிரிஞ்சு வருசம் அஞ்சாச்சு

நோய்நொடியில் வாடுகிறேன்
மனசுடைஞ்சு வாழுகிறேன்
மருந்தும் கைகொடுக்கவில்லை
மகராசி உன் பராமரிப்பில்லை

பாதிவாழ்க்கையிலை -உன்
பாசப்பரப்பினிலை என் ஆவி
பறிபோகுமாயின் சந்தோசமாய்
ஏற்றிடுவேன்!

பழஞ்சோறு குழைச்சு நீ
பதமாத் தருகையிலை
தேனா இனிக்குமே -பாவி
பெற்ற மக்கள் ஆமி

சோற்றுக்குள் மண்ணைப்
போட்டுத் தாறாங்கள்

கிணற்றுத் தண்ணி என்று
குடிக்கச் சலத்தைவிட்டுத்
தாறாங்கள்!

இராப்பொழுதானால் இங்கே
சாவோலம் தான் கேட்கும்
ஒவ்வொரு இரவிலும் ஓர்
உயிர் சத்தியமாய்ச் சாகும்

தண்டனை ஏற்றுத் திருந்தித்
திரும்பி வந்தவன் எவனுமில்லை
இது மரணங்களை உற்பத்தி
செய்யும் சிறைச்சாலை

உங்கள் எண்ணம் இருப்பதாலோ
என்னுயிர் அசையிதிங்கே
ஒருமுறை உங்களைப் பார்த்திட
சந்தர்ப்பம் தருவாரோ இங்கே

நாம் செதுக்கிய அந்த ஒரு
உயிர் ஓவியத்தைப் பார்ப்பேனா?
என் முகம் தெரியா முத்துமகனை
முத்தமிட்டுச் சாவேனா?

உங்கனைப் பார்ப்பேனென்றோ
மரணம் என்னை நோக்கி வரவில்லை
இச் சிறைச்சாலையில் எத்தனை
மரணம் அரங்கேறியதோ தெரியவில்லை

எங்கிருந்து என்ன பாடு படுவீரோ
நானறியேன் நாயகியே
கஞ்சி குடிக்கக் கூட வழி உண்டோ
ஐயோ! ஏது செய்வேன்

கட்டி வைச்சு அடிப்பதும்
கிடத்தி வைச்சு மிதிப்பதும் கொடுமை
வீர நரம்பை அறுத்துவிட்டு
நசிப்திலோ இவரது பெருமை

வரும் சந்ததியினர் வாழ்வு
வசந்தத்தோடு அமைய வேண்டும்
களத்தில் எம் மகனும் இணைந்து
பகைவரைப் பந்தாட வேண்டும்

ஊன் உயிரை உருக்கி -அவன்
உடலுக்கு உரம் சேர்த்துவிடு
பூர்வீகம் மீட்கும் போரில்
முடிந்தால் நீயும் துவக்கையெடு

நோர்வே தமிழ்முரசம் எனும் வானொலியில் 2001ம் ஆண்டு என்னை செவ்வி கண்டு ஒலிபரப்பானது இக்கவிதை.

# பிரசவ வேதனை

எமது தாயகத்தின் தமிழின வாழ்க்கை பாலைவனத்துப் பயணம் போன்று பயங்கரமானது. இரவு, நட்டநடுச் சாமம் பிரசவவலியால் ஒரு பெண் தவித்துக் கொண்டிருக்கிறாள். எவரையும் துணைக்கு அழைக்க முடியாது, இராணுவச் சட்டத்திட்டங்களுக்குப் பயந்து வாழும் ஒரு கணவனின் பரிதவிப்பே இக் கவிதை.

நட்டநடு சாமத்திலை
நல்லுறக்க வேளையிலை
எனை நம்பி வந்தவளே
என்னடியம்மா ஆச்சு ?

ஏதேனும் கனவு கண்டாயா
உன் கணவன் பக்கத்திலை
இருக்கிறேன் உறங்கடியம்மா
உறங்கு !

என்ன சொன்னாய் ?
வயிறு வலிக்குதா ?
என் வாரிசு வந்துதிக்கத்
தவிக்குதா ?

ஐயோ...ஐயையோ
நான் என்ன பண்ண ?

சுடுதண்ணி வைக்கவா ?
புகை வந்தால் புலியென்று
பகை வந்து உள்ளிடுமே
உத்தமியே

பெத்தாச்சி பக்கமில்லை
பெத்தவளும் வன்னியிலை
இந்த முன்னிருட்டு
வேளையிலை நான்
யாரைத் தான் போய்க் கூட்ட

எந்தெந்த மூலையிலை
எதிரியவன் இருப்பானோ
வெளியே நான் போனால்
புலியென்று நினைத்துக்
குறி வைப்பானோ

கூப்பிட்டால் குரல் கொடுக்க
கூடியிருந்த சொந்தங்கள்
பக்கமில்லை - இருந்தாலும்
வந்துதவ இந்த இராணுவ
ஆட்சியிலை சட்டமில்லை !

அம்மியோடு குழவி
உரசக் கூடாது
உரலோடு உலக்கை
சத்தம் கேட்கக் கூடாது
சட்டங்கள் பலமாயிருக்க
உனக்குச் சுகப்பிரசவம்
செய்ய நான் எங்கே
வைத்தியரைப் பார்க்க !

பைத்தியம் ஆக்குதடி
அழாதே பூமணியே !

என் வீட்டுக் கோபுரமே
சத்தம் கேட்டால்
தரித்திரங்கள் உள்ளே வரும்
தவிப்பின் வலி தெரியாது
இதயமில்லா இனவாதம்
எட்டி உதைத்து விடும்
இரக்கமில்லாப் பாவிகள்
உன்னைப் புதைத்து விடுவர் !

வண்டி கட்டிக் கொண்டு போக
இது பழைய யாழ்பாணம் இல்லை
விசப்பாம்பு ஆட்சி நடத்தும்
பிரதேசம் பிள்ளை

ஏக்கங்கள் என்னைச்
சூழ்வதென்ன ?
இப்படி எத்தனை
பிரசவங்கள்
சவங்களாகிப் போயின

என் பிள்ளை
உயிரோடு வருமோ ?
இல்லை !
கருவறை தான் என்
கண்மணிக்கு
கல்லறையாகிடுமோ ?

கடவுளும் கல்லாகிப்
போனானோ ?
கருணையில்லா ஆட்சியிலே
அகப்பட்டுப் போனோமோ ?

உயிர் அற்று என் பிள்ளை
பிறந்தால்
அழுது நான் சாகிறேன்
உயிரோடு வந்துதித்தால்
தமிழீழ விடுதலைத் தாயே
உன் மடியில் கொண்டு
தருகிறேன்.

# கப்டன் மில்லர்

உடல் எங்கும்
தீ சுமந்து சென்று
எதிரிகளின் பாசறை தேடி
பாய்ந்தவன் மில்லர்

ஒப்றேசன் லிபறேசனின்
இதயத்தில் தீ
கொழுத்தியவன் !
இலங்கையை
இந்தியாவிடம்
கையேந்த வைத்தவன்
மில்லர் !

காற்றாகிப் போகாது
தேசத்தின் உயிர்மூச்சாய்
ஆயிரமாயிரம்
கரும்புலித் தோழர்களின்
உடலில் உயிராய்
தமிழீழமண் மீது
அழியாத முகவரியாய்

மில்லர் நீ வரலாற்றுப்
புத்தகத்தின் முன்னுரை
தேசியப் புத்தகத்தின்
முதற்பக்கம் !
முக்கியபக்கமும் கூட !

நெல்லியடியில்
இலங்கையரசுக்கு
நெற்றியடி கொடுத்து
ஈழத்தமிழனின் வீரம்
விளக்கினாய் நீ !

நீ இறக்கவில்லை
எங்கள் இதயத்தில்
நிலைத்திருக்கிறாய் !
ஈழமண் எங்கும்
உதிராத பூவாய்
முளைத்திருக்கிறாய் !

தேசத்தின் தேவை
தெரிந்து இறுதிவரை
தியாகம் புரிந்தவன் நீ !
தலைவரின் கொள்கையை
மதித்தவன் !

ஆக்கிரமிக்க வந்தவனின்
ஆட்சியை மிதித்தவன்
நீ தமிழீழம் ஒன்றே
தமிழனின் தரணியென்றவன் !

மில்லர் நீ தமிழீழத்தின்
இதயப்பிரதேசத்தில்
என்றும் பிரகாசித்துக்
கொண்டிருப்பாய்...

# வேங்கைகள் சரிதம்

தமிழீழத்தைச் சுற்றித்
   தொல்லைகளின் ஆட்சி
எல்லைகள் எங்கிலும்
   கொலைவெறியரின் காட்சி
கள்ளப்பூனைகளின் நோட்டம்
   குள்ளநரிகளின் நாட்டம்
விழித்திரு என் தேசிய இனமே
   வேங்கை கண்டதில்லை வீழ்ச்சி

தாவும் தவளைகள் இல்லை
   நாம் பாயும் புலிகள் படை
உடலில் ஊறுவது தீப்பிழம்புகள்
   உடமை தொடும் எதிரி பிணங்கள்
தங்கம் போல தமிழன் தாய்த் திருநாடு
   தட்டிப்பறிக்க விட்டுக்கொடுப்பதோ கூறு
தூங்கும் தென்றல்களே புயலாகுங்கள்
   தாக்குவோம் பகையை வாருங்கள்

கரிகாலன் படையை அழிக்க
   கழுதைகள் திரண்டு வருவதா ?
நாட்டுப் புலியைப் பிடிக்க
   காட்டுப் பூனைகள் கூட்டமா ?
எந்தையர் குலாவிய தாயகம் தாக்க
   முந்தைய பரதேசிகள் வருவதா ?
புலிகள் மலையை எதிர்த்து - இங்கு
   பன்னிகள் போர் புரிவதா ?

வாருங்கள் வந்து பாருங்கள் உயிர்
   பிடுங்கி அடுப்பில் வைப்போம்
வாசலில் வைத்த காலை வெட்டி வீட்டு
   நாய்க்கு எலும்பாய்க் கொடுப்போம்
உங்கள் எல்லையில் நில்லுங்கள்
   களம் கண்டால் கலங்குவீர்கள்
அடித்தால் வதைத்துப் புதைப்போம்
   தாயைத் தொட்டால் உயிர் அறுப்போம்

திக்கெட்டும் திகைக்கும் வீரம்
   படைத்தவர் எங்களின் மறவர் தீரம்
போர்க்களம் என்றால் போதும்
   தீயவர் தலைகள் திசையெங்கும் சிதறும்
பார் கூட படை திரட்டி வரட்டும்
   பத்து நாளில் பகையை புலிகள் விரட்டுவார்
வேரோடு பிடுங்கி அக்கரைக்கு வீசுவார் - அவர்
   வேங்கைகள் சரிதம் பாடி ஓடுவார்

வெள்ளையவன் காலை எங்கள்
   வன்னியன் வீழ்ந்து தொட்டானா ?
வாரிசுகள் நாம் கை கட்டி நிற்போமா ?
   வேலியைப் பிரித்து வந்து வேதனையை
பரப்பிச் செல்ல வாய் பார்த்து நிற்போமோ ?
   சாதனையில் வாழ்ந்த வம்சம் நாம்
சோதனையை முதுகில் சுமந்து அழுவதா ?
   ஓங்கி நாம் எழுந்தால் பகை மிஞ்சுமா ?

சமாதானப் பேச்சுக்கு இடம் கொடுத்தோம்
  பேதையவள் பேச்சுக்கு மதித்தோம்
ஆகாது என்று சொல்லி ஏமாற்றினாள்
  துப்பாகியால் பேச அழைத்தாள்
அமைதியாய் இருந்தவர் துடித்தெழுந்தார்
  அடியைக் கொடுத்து ஆனையிறவை மீட்டார்
சிங்கத்துக்குப் பிறந்தது எலியென்று ஆச்சு
  புலிக்குப் பிறந்தது புலியென்று காட்டியாச்சு

அரக்கி நாட்டின் (அ)சிங்கவால் பிடுங்கி
  வம்சத்தையே சிறையில் இட்டு வதைத்து
அரளிமாளிகை அடியோடு நொறுங்கிப் போக
  சீர்கெட்ட ஆட்சியாளரை கவிழ்த்து கயிறு பின்னி
கழுத்தில் கட்டி மந்தைகளாய் இழுத்து வந்து
  எம் மக்களின் கையில் ஒப்படைக்க வேண்டும்
செம்மணியில் சமாதி கட்ட வேண்டும்
  செந்தமிழீழம் சந்தோசத்தில் செழிக்க வேண்டும்

# *வெளிநாட்டுச் சிறையில்*

பூஞ்சோலை மேனி தன்னில்
   மிதந்தாடும் பூமகளே
நெஞ்சருகில் நீ இருந்தால்
   கவிதைக்கு ஏது பஞ்சமடி

பனிநாடு கடந்து வந்து -உன்
   பக்கத்தில் இருந்துவிட்டால்
தனிநாட்டுத் தாகம் தீர்ந்துவிடும்
   ஆயுளுக்கும் ஆயுள் கூடுமடி

பெரியவிழிப் பார்வையின் மேல்
   எப்பொழுதும் விழுந்துவிட்டால்
உரிய உயிர் சொந்தமாகி -தன்
   ஊரோடு கூடி வாழுமடி

குடியிசையிலை காச்சிய கூழ்
   ஒருவேளை குடிச்சாலும்
அடிமையிலை வாழ்ந்தாலும்
   ஆனந்தம் வந்து பொங்குமடி

பெண்ணே உன் முகத்திரையில்
   தினம் என்னைக் கண்டுவிட்டால்
கண்ணே எந்தன் காயமெல்லாம்
   உன் காலடியில் வேகுமடி

உன் வாய் திறந்து என் பெயர்
   அழைத்து நீ ஆதரித்தால்
துன்பம் ஒருபோதும் என்னை
   தீண்டாது போகுமடி

உங்கே நீ உயிருடன் இருப்பாய்
   என்னவளே நான் அறிவேன்
திங்கள் முகத்தாளே திரவியமே
   தீண்டும் உன் நினைப்பு வாட்டுதடி

பாதிவழி வரை வந்தவர் -பின்
   காட்டுவழி காட்டிவிட்டு மறைந்தார்
மீதிவழி மீறி நான் ஓடையிலை
   மடக்கிப் பிடிச்சவங்கள் விடவில்லை

காணிவளவு வித்து ஆக்கிய காசு
   வெளிநாட்டுச் சிறையில் வாழுது
மீண்டுவருவேனோ மாண்டு விடுவேனோ
   உயிர் கொஞ்சம்தான் மிஞ்சியிருக்குது

12.04.1999

# புலம் வாழ் இளம் தமிழனே

உங்களது ஆளுமை இறக்கையை விரித்தால்
தேசத்தின் விடியல் தூரமில்லை
ஆக்கும் கரங்களை உயர்த்தி நின்றால்
அடிமை விலங்கு எமக்கில்லை

துள்ளும் வயதில் துடிக்கும் இரத்தங்களே
விடுதலை அணியில் சேருங்கள்
தோளோடு நெஞ்சை நிமிர்த்தி வாருங்கள்
தோல்விகள் வராது நம்புங்கள்

புரட்சிப் பாடல் கவிதை கேட்டு இரசிப்பது
பயன்கள் அளிப்பது கிடையாது
எழுதியோர் கருத்தை இயக்கிப் பார்த்தால்
ஏதிலி வாழ்க்கை இருக்காது

சோற்றை உண்டு சோம்பல் கொண்டால்
சிகரத்தை எட்ட முடியாது - உன்
முயற்சியின் நரம்பில் புரட்சியைப் புகுத்தினால்
சாவுகளைச் சந்திக்க சந்தர்ப்பம் ஏது ?

வேதம் படித்து சாமியே சரணமென்றால்
உனது ஆன்மா சுத்தமாகும்
வேதமே கல்வி ! சாமியே வாழ்க்கை! எனில்
உனது நாட்டுச் சுதந்திரம் என்னாகும் ?

எங்கள் விதி இப்படித் தான் இருக்குமென்று
   சொல்வது மனிதத்தின் இயல்பு தான்
உங்கள் மதியில் அறிவுச் சுடரைப் பரப்பி
   செயற்பட்டால் இயல்பு கூட மாறும் தான்

சாதனைப் பறவையாய் இவ் உலகெங்கும்
   பறந்து சரித்திரம் படையுங்கள்
புலம் வாழ் இளம் தமிழனே உமது தேசப்
   பெருமையை நீங்கள் பரப்புங்கள்

வேட்டுச் சத்தம் கேட்டுத் திகைத்துப் பறக்கும்
   பறவையின் வாழ்க்கையை மறவுங்கள்
தாய் நிலத்தில் கட்டிய வீட்டில் கூடிவாழும்
   வாழ்வை நிலைநாட்ட வழி சமையுங்கள்

# நான் உறங்கிய தொட்டில்

தனிமையோடு
தவம் கிடந்து
தவிக்கின்ற தனிப்
பொழுதில்
தாய்மடி தேடி
தலை சாயத்
துடிக்கின்ற போதில்
என்னை வந்து
வட்டமிடுது
அந்த என்னூர்
நினைவுகள்

ஆலமரத்தடியும்
நான் அரசாண்ட
வீட்டடியும்
கோயில் நெசவடியும்
என் காலடி பட்ட
வீதிகளும்

இன்னும்
என் நெஞ்சை விட்டு
அழியவில்லை
கொஞ்சம் கூட
என்னூர் நினைவு
குறையவில்லை

இறந்தாலும் நெஞ்சுக்குள்
இருக்கும் என்னூர்
நினைவு பறந்து பல
தேசம் வந்தாலும்
மறந்து போகாது

என்னூரில் தான்
எத்தனை சுகம்
கண்டேன்
அந்தப் பருவத்தில்
பறவையைப் பிடிக்க
ஆவலும் கொண்டேன்

அடடா...
அந்நாள் இன்பங்கள்
அழியாத கல்வெட்டுக்கள்
அன்னையவள் பாடிய
தாலாட்டில்
நான் உறங்கிய தொட்டில்

ஆசை அரங்கினிலே
மீசை முளைத்த பிள்ளை
மண்ணை முத்தமிட்டுத்
தொழத் துடிக்கின்றேன்
ஒரு பாசையின்றி
மௌனத்தோடு தினம்
கட்டியழத் தவிக்கின்றேன்

கூழுக்குக் கவி பாடிய
புலவா நீ இருந்த
ஊருக்குக் கவியேதும்
பாடவில்லையே
கல்லொன்று இருந்து
உன் வரலாறு சொல்லுதே
நீ இருந்ததின்றி நம்
ஊருக்கு வரலாறு இல்லையே

நாகேந்திரப்பா வீட்டுக்
கொய்யாவே
என் பாதம் பட்ட
பாதைகளே நான்
படித்த வடமூலைப்
பள்ளியே
என் உயிரில் இன்னும்
உங்களின் அடையாளம்
இருக்கின்றது

நடைவண்டி தள்ளி
நடை பயின்ற போது
என் பிஞ்சுப் பாதம்
தாங்கிய என்னூர் மண்ணே
உன் பாசப் படுக்கையில்
என் ஆவி பறி போகுமாயின்
அதுவே எனக்கு சந்தோசம்
அம்மா...

வயாவிளான் என்ற
வண்ணமகளே உனக்கு
வயவையெனச்
செல்லப் பேரம்மா
வந்தோரை வரவேற்கும்
வாசலம்மா நீ வண்ணப்
பூங்காவின் வாசமம்மா

கண்கள் கொட்டும்
கனவுகளில்
எண்ணங்கள்
சிறகடிக்கும்
பொழுதுகளில்
நெஞ்சமிங்கு தனிமையிலே
புலம்புதையா

என்
பிரசவப் பிரதேசத்தின்
பிடியிலிருக்க
பிள்ளைமனம்
விரும்புதம்மா....!

# *வீரத் தொகுப்பு*

வளமான நிலம் மீது
களமாடினார் - என்றும்
தமிழ் கூட மறவாத
மரபாகினார்
போராடும் துணிவோடு
அவர் புலியாகினார் - என்றும்
கவிபுணையும் கவிஞருக்கு
மொழியாகினார்

உடலுக்குள் அவர்
சுமந்தார் நெருப்பு
புலிகளுக்குள்
அது தானே சிறப்பு

உயிரான தமிழுக்கு
உறவாகினார் அதன்
உயிர் காக்க தன்
உயிர் போக்கினார்
கடமை தவறாது நின்று
பணியாற்றினார்
கொடுமைப் பகையோட
புயலாகிப் புகழாகினார்

தனித்தேசம் ஒன்றே
புலிகளின் ஆத்மாவின் தவிப்பு
களப்பள்ளியில் அது தானே
அவர்கள் படித்த படிப்பு

விலங்கொடிக்க உயிரை
அவர் திறப்பாக்கினார்
அன்னை மண்மீது
வீரத்தின் பிறப்பாகினார்
அணையாத அனலாகி
எரிமலையாகினார்
ஆன்றோர்கள் ஆளவே
அவர் விரும்பிக் களமாடினார்

உள்ளத்தில் உள்ளதெல்லாம்
விடுதலையின் கொதிப்பு - அவர்
உணர்வோடு இருப்பது
உண்மையான துடிப்பு

தங்கள் பருவத்தின் பயனை
அவர்கள் பயனாக்கினார்
வரும் எதிர்காலச்சந்ததியின்
பயன் நோக்கினார் - உயிர்
திறந்து உயிரெழுத்தில்
மறுபிறப்பாகினார்
என்றும் இறவாது
தமிழோடு அவர் வாழுவார்

உயிர்களுக்குள் அவர்
உன்னதத்தின் உயிர்ப்பு
அவர்கள் பிரபாகரன்
எழுதிய வீரத் தொகுப்பு

# உரிமைப் போர்

தமிழீழம் தனியாக வேண்டும்
   தமிழா நினைவில் வையடா
தாய்நாட்டை ஆளும் உரிமை
   தமிழர் எமக்குத் தானடா

தமிழ் தரணி ஆளுமென்று
   எழுந்து சொல்லடா
தம்பி தாயகத்து எதிரிகளை
   எரிக்கத் துணியடா

ஆதி காலக் குடியழிக்க
   அண்டைநாட்டுப் பகையடா
அஞ்சிப் பகை ஒழிந்து ஓட
   அன்னையினமே எழும்படா

வம்சம் வாழ்ந்த நிலத்திலே
   வெந்து சாகக் கூடுமா
வேல் எடுத்துத் தாக்கி
   வென்ற சரித்திரம் கூறடா

அடிமையாக்கி அடிபணிய
   நாம் உணர்ச்சியற்ற மனிதமா?
நம் மண்ணில் உள்ள புல்லும்
   புரட்சி செய்யும் தெரியுமா ?

எந்தையர் கட்டிக்காத்த பூமியை
எதிரியிடம் ஒப்படைத்து நிற்பதா
வேல் பிடித்த எங்கள் கூட்டம்
வெகுண்டு எழுந்தால் பார் தாங்குமா

ஏதிலியோடு சேர்ந்த போலி
வாழ்க்கை எமக்குத் தேவையா
செந்தமிழீழம் எங்கள் தேசம்
வான்வரை கேட்கச் சொல்லடா

எண்ணிய வாழ்வு கிட்டும் வரை
ஈழப்போர் அலை ஓயாது
பாரே திரண்டு பகையாய் வரட்டும்
வேங்கைகள் மலை சாயாது

தாயகம் பறிக்க வந்த கயவரை
தயங்காமல் தொலைத்து விடு
உடலே வெந்து உயிரே போகும்
உரிமைப் போரை வென்று விடு

காசிஅண்ணன் சொன்ன கருத்தை
கவனத்தில் வைத்துக் கொள்ளடா
ஆண்ட பரம்பரை மீண்டுமொருமுறை
ஆள நினைப்பதில் என்ன குறை

எண்ணித் துணிந்து எழுந்தால்
ஏட்டில் எங்கள் வீரவரலாறு
கன்னித்தமிழும் துள்ளிச் சிரிக்க
களத்தில் வந்து உடன்சேரு

## *வாழும்... நாளில்!*

நான் வாழ்ந்து
பார்க்க வேண்டும்
கடவுள் கருணை
புரிய வேண்டும்

நாட்டிற்கு நல்லதொரு
நலன் பேண வேண்டும்
புண்பட்ட உறவுகளின்
வாழ்வில் விடியல் வேண்டும்

வதை செய்த மானிடரை
வதம் செய்ய வேண்டும்
வளம் மீண்டும் நாட்டில்
பெரிது வாழ வேண்டும்

தமிழுடன் தமிழனின்
தரம் ஓங்க வேண்டும்
ஆசை என்றும் வேண்டும்
அது அளவோடு வேண்டும்

அமைதி நிலைத்த
ஆரோக்கியம் வேண்டும்
கண்கள் பேசும்
காதல் வேண்டும்

வேண்டும் வேண்டும் என்ற
வேட்கை குறையாது வேண்டும்
வயது குன்றிப் போனாலும்
இளமை தெரிய வேண்டும்

நான் செய்த பாவம் யாவும்
என்னுடன் வர வேண்டும்
என் குழந்தைகள் இரண்டும்
இன்வாழ இறைவா வரம் வேண்டும்

வாழும் நாளில் நான் ஒரு
கவிஞனாக வேண்டும் - அதை
செவிகள் இரண்டும் கேட்க
உதிரம் கூத்தாட வேண்டும்

மாழும் முன்னே என்
ஊரின் மடி தடவ வேண்டும்
மாழும் நாளில் என்
ஊரும் கண்ணீர் விட வேண்டும்

என் கால்கள் இரண்டிலும்
காலம் கடந்த பலம் வேண்டும்
மரணம் என்னை அழைத்தால்
நடந்து சுடுகாடு சேர வேண்டும்

# *என் வீட்டு வளவு*

உண்ண
மறந்திருக்கிறேன்
உறவுகளை
மறந்திருக்கிறேன்
என்னையே
பல தடவை
மறந்திருக்கிறேன்

ஆனால்
உன்னை மட்டும்
மறக்க முடியாது
நான்

என் எண்ணத்தின்
கிண்ணத்தில்
உன்னைப் பற்றியதான
பதிவுகள் தான்
அதிகம் நிரம்பியிருக்கிறது

நீ குடியிருந்த
தெருவில் தானே
என் பொழுதுகள்
பொன்னானது

உன்
மடிமீது கிடந்து
கொண்டு நான்
கண்ட கனவுகள்
இன்னும்
கலையவில்லை

புலத்தில்
இருந்தாலும்
என் புலன்கள்
உன்னைத் தானே
சுற்றுகிறது

எட்டத்தில் நான்
ஏதிலியாய்
அடையாளம்
எய்திருக்கிறேன்

தொட்டுப்
பார்க்கக் கூட
முடியாமல்
உன் தூரம்
பார்த்து என்
விழிகள் தூறல்
போடுகிறது

உன்
அடையாளம் பற்றி
எவரும் சொல்வதில்லை
பத்திரிகைகள் பக்கத்தில்
கூட நீ இடம் பெற
மாட்டாய்

என் வீட்டு வளவே
உன்னை
ஏக்கத்தில் எழுதி
தீர்ப்பதைத் தவிர

தூக்கத்தில்
எப்போதாவது கனவில்
கண்டு சிரிப்பதைத் தவிர
என்னத்தை நான்
செய்வேன் ?

இரு! வருவேன்
நிச்சயம் வருவேன்
தாக்கத்தில் நீ
தவிப்பதை நான்
ஒரு போதும்
அனுமதிக்க மாட்டேன்

உறவுகள்
வேண்டுமானால் புதுசாய்
ஆயிரம் வரலாம்
ஆனால்
தாயும், தாய்நாடும்,
என் வீட்டு வளவும்
எப்போதும் எனக்கு
தமிழீழத்தில் தான்

# ஒரு கிராமத்தின் ஏக்கம்

எங்கே என் உறவுகள்?
என் அடி நுனி
வருடி விளையாடிய
குழந்தைகள் எங்கே?
என்னைத் தனித்து விட்டு
எங்கே போனார்கள்?

மீண்டும் என் முகம்
பார்க்க வருவார்களா?
என் உறவுகளோடு
நான் சந்தோசமாய்
இருக்க சந்தர்ப்பம்
கிட்டுமா?- இந்த சமாதானப்
பேச்சு சாத்தியமானால் என்
மக்களை கிராமம் நான்
சந்திப்பேனா?

ஓ....பத்தைகளின்
சூழலில்
பாம்புப் புற்றுகளின்
மத்தியில் குடியிருக்கும்
என்னை அடையாளம்
கண்டு கொள்வார்களா?

இல்லை !
அந்நிய பூமியைப்
பார்ப்பது போல்
அன்னை பூமி
என்னையும் பார்த்துப்
போவார்களா?

சிரிப்பொலி இல்லை
இங்கு கோயில்
மணியொலி இல்லை
வேப்பமரக்குயில் இல்லை
மாமரத்துக் கிளியில்லை

மொத்தத்தில் நான் ஒரு
கிராமம் இல்லை
சுடுகாடு!
உயிரினங்கள் வசிக்கப்
பிடிக்காத
பிரதேசமாய் நான்....

இப்படியிருக்கும்
என்னை
அவர்கள்
விரும்புவார்களா?

அவர்கள் நடந்து வரும்
பாதையெங்கும் சப்பாத்தி
முட்களின் படையெடுப்பு
சுத்தமற்ற காற்று!
எலும்புக் கூடு
நிறைந்த கிணறு!
முறிந்து போன
மின்கம்பங்கள்!

மொட்டைப் பனைமரம்!
இளநீர் அற்ற தென்னை!
ஆங்காங்கே மிதிவெடிகள்
எதுவுமே இல்லாத நான்
முகவரியற்ற கிராமம்!

பச்சைப் பசேலென
படர்ந்து கிடந்த என்
தோட்டவெளிகள்
வறண்டு போன முரட்டுக்
காடாய்

வாசனை மலர்களின்
கிளைகளில் எல்லாம்
மசுக்குட்டி
வம்சகங்களின் நெளிவுகள்

என்னைப் பார்ப்தற்கு
எதிரிகள் கூட தற்போது
வருவதில்லை

இந்தக் கிராமத்து
மக்களும் வரமாட்டார்கள்!
வந்தாலும் என்னை
அடையாளம் காண
மாட்டார்கள்!
வரவே மாட்டார்கள்!

இடியோடு வானம்
அதிர்ந்தது மண் மீது
மழை பெய்ய....
ஓ.....எத்தனை ஆண்டுகளுக்குப்
பிறகு இந்த மழை!

என்ன மழையே இந்தக்
கிராமத்தோடு ஒப்பாரி
வைக்க வந்தாயோ?

மழை தன் பாணியில்
சரசரவெனச் சிரித்தது
உன் மக்கள் வருவார்கள்
உன் அடையாளம்
கண்டு பெயர் சொல்லி
அழைப்பார்கள்!

புலத்தில் இருந்தாலும்
தாய்மண்ணில் பிறந்தவர்கள்
நிச்சயம் வருவார்கள்
மண்பற்றுக் கொண்டவர்கள்
வந்துன்னை வசந்தகாலப்
பூமியாய் மாற்றுவார்கள் நம்பு

என மழை சொல்லி
ஓய்ந்தது
கிராமம் சிரித்தது!

# பருவம் பதினாறு

நான்
பருவத்தில்
பதினாறு தான்!
ஆனால்
உருவத்தில்
பதினெட்டு!

ஏனோ பார்ப்பவர்
என்னைக் குமரி என்கிறார்
குழந்தை என்கிறார்
என் பெற்றோர்

கூடப் பிறந்தவனைத் தவிர
வேறு எவரையும் அண்ணா
என அழைத்தால்
பெயர் சொல்லி அழையென்று
அதட்டுகிறார்!

வஞ்சகமின்றிப்
பழகின்றேன்
வளவளவென்று
கதைக்கிறேன்

குழந்தைகளோடு
திரிகின்றேன்
குட்டி நாய்களைக்
கண்டு தொட்டு
விளையாடுகின்றேன்!

என் உள்ளத்தில்
உள்ளதெல்லாம்
சிறுபிள்ளைக் குணங்கள்
எது சரி எது பிழை
என்பதைக் கூட
முடிவெடுக்கத் தெரியாத
பருவம் என் பருவம்
பதினாறு தான்!

எவ்விழாவுக்குப் போனாலும்
கண்களால் ஆண்கள்
என்னைத் தின்கிறார்கள்
திருமணமானவர்கள் கூட
கடைக்கண்ணால் கொடைகிறார்கள்

அம்மா அடிக்கடி
சொல்லும் மந்திரம் -எவர்
எது கேட்டாலும் தெரியாது
சொல்லிப் போ!

அப்பா அன்பாய்
சொல்லும் வார்த்தை
எங்கேயும் நில்லாதை
நேரத்துக்கு வீட்டை வா!

புரியவில்லை! எதுவும்
புரியவில்லை - இது
பிடிக்கவில்லை - பூமியில்
எதுவும் பிடிக்கவில்லை

அண்ணாவின் நண்பன்
கண்டு சிரித்தேன்
கைத்தொலைபேசி
இலக்கம் கொடுத்துப்
போகிறார்

அப்பாவின் நண்பன்
கண்டு வணக்கம் சொன்னேன்
என் கைத்தொலைபேசி
இலக்கம் கேட்கிறார்

என்னென்னவா சொல்கிறார்
ஏதேதோ கதைக்கிறார்
பயமாய் இருக்கிறது அம்மா
பயமாய் இருக்கிறது

அம்மாவுக்குச் சொல்லிப்
பதில் தேடினேன்

பயந்தபடி புருவம்
உயர்த்தி அம்மா
சொன்னாள்

பதினெட்டில்
உனக்குக்
கல்யாணம்

10-12-2005

# *என் எதிர்காலத் தோழனுக்கு*

தாயை மறவாது வணங்கி வாழ்
தந்தை சொல் தட்டாது வளர்
காணும் கனவிலும் தெய்வம் காண்
கடமையில் கவனமாய் நில்

தோல்விகள் தொடர்ந்தாலும் சிரி
வெற்றிகள் வந்தால் பொறுமை கொள்
தாய்மொழி உணர்வோடு இருக்கப் பழகு
தாய்மொழி எழுத்தறிந்து வளர்

மதம் பார்க்கும் மனிதத்தை அழி
பிரிவே இல்லாத காதல் செய்
வையத்தில் சுதந்திரம் இருக்க வை
வானவரும் அதையே அருளச் செய்

உண்ணாது இருந்து பசியின் வலி அறி
எண்ணத்தில் ஏழையை நிறுத்திப் பார்
ஏற்றத்தை அவர் வாழ்வில் வழங்கு
எதிர்ப்பு எதுவாய் இருந்தாலும் தாங்கு

புகழ்ச்சிக்கு மயங்காத மனது தேவை
பாடல் இசைக்கின்ற ஞானம் அறி
புன்னகையோடு வாழ்க்கை செய்
பூமியில் புண்ணியம் தேடு

இலட்சியமென்று ஒன்று இருக்கட்டும்
அலச்சியம் இன்றி அதை அடை
இதயப் பரப்பில் இன்பம் வளர்
அழுதாலும் அமைதியில் அழுது முடி

நானெனும் ஆணவம் உன்னை அழிக்கும்
ஒற்றுமை எனும் நேர்கோட்டில் நட
நன்மை செய்வோரை கண்டு வணங்கு
தாய்நாட்டுக்குத் தீமை செய்யாதே

நல்லதையே செய்யும் வரத்தை வாங்கு
நோய்நொடி இல்லா வாழ்க்கை வேண்டு
நூல்கள் படிக்கும் பழக்கம் பழகு -உன்
மகனுக்கும் நீயே ஆசானாய் விளங்கு

பண்பாட்டை எப்போதும் பற்றிக் கொள்
பாரில் பரம்பரை சிறக்க உதவு
முதியோரை நின்று வணங்கி நிமிர்
முடிந்தவரை கல்வியை காதல் செய்

சூட்சி அறியும் ஆற்றல் கற்றுக்கொள்
எவரிடத்திலும் எப்போதும் அடிமையாகாதே
செத்தாலும் தமிழானாய் செத்துப் போ
செத்த பின்னும் தமிழுக்குள் இருந்து வாழ்

# உண்மையொன்று ஊமையாகிறது

ஐயோ அம்மா!
என்று கத்திக்கொண்டு
குந்தியிருந்தாள் முற்றத்திலை
குழந்தையொன்று
குமரியாகி !

அடுப்படியயை விட்டு
ஓடி வந்த தாயவளோ
உச்சியிலை கையை வைச்சு
திகைத்துப் போய்
நின்றாளே !

அயல்வீட்டுக் குமரியெல்லாம்
கதவடைச்சு வீட்டுக்குள்ளை
மூச்சு வீடும் சத்தம் கூட
கேட்கவில்லை அமைதியாகி
மூலையிலை !

எந்த வீட்டு மானோ
சிங்கத்தின் வாயில்
சிக்கியது ?
பெருசுகள் எல்லாம்
புலம்பியது !

ஊருக்குத் தெரியாது
சந்தோசச் செய்தியொன்று
சங்கடத்தில் வாடுதென்று !

சந்தணம் பூசிக் குளிப்பாட்ட
முடியாது என்னவளே
நான் என்ன பண்ண ?

பொத்தி வளர்த்த
கொத்துமலரே
உச்சிமோந்து முத்தமிட
மனசும் இடம்
கொடுக்குதில்லை
காஞ்சு போன கழுத்துக்கு
சங்கிலி போட வக்கில்லை

சொந்தங்களை
வரவழைச்சா
சிங்கங்கள் மோப்பமிடும்
மானாட்டம் வளர்த்தவளை
பலிகொடுக்க நேர்ந்துவிடும் !

சொந்தமென்று சொல்லி
குடி நிலத்தில் குந்தியிருக்க
முடியவில்லை - இந்நிலையில்
வாழ்விருக்க இயற்கை
ஏன் தான் உனைப் பார்த்து
இரங்கவில்லை !

ஐயோ...நான் என்ன
செய்ய ?

முந்தநாள் அடிச்ச
செல்லிலை
சந்தைக்குப் போன
கொப்பன் வீடு திரும்பவில்லை !

கூடப் பிறந்தவன் ஒருவன்
அவனும்
போராட்டக் களத்திலை !

ஆசைக்கு ஒரு கிளியை
வளர்த்தேனே !

என் இராசாத்தி
இந்தச் சிங்கக் கூட்டத்து
மத்தியிலை உனைப்
பக்குவமா ஆளாக்க
வழியொன்றும் தோன்றலையே

அம்மா ! அடியே !
கண்ணம்மா !
அரும்பாக இருந்திருந்தால்
புலம்பாமல் இருந்திருப்பேன் !

இன்றோ ? நாளையோ ?
வேட்டைக்கு வருவாங்களடி
நினைச்சாலோ
நெஞ்செல்லாம் வெடிக்குதடி !

இராப்பகலா எனக்கு
இனி நிம்மதியில்லை
கால், கையும்
இயங்குதில்லை
கழுத்துக்கு அங்காலை
எச்சிலும் இறங்குதில்லை !

கண்ணுக்கு எட்டிய
தூரம் எவனையும் காணவில்லை
இன்றைக்கென்று பார்த்து
வீட்டுப் படலையிலையும்
ஆமிச்சென்றி இல்லை !

காலநேரம் தெரியாமல்
கடவுள் ஏன்டியம்மா
இப்பரிசு தந்தானோ ?

அடியே நான்
பெத்த பெட்டச்சி !
பொறடி மகராசி பொறு
ஓயாத அலைகள்
இன்றோ நாளையோ
யாழை மீட்கும்
சுதந்திர விழாவோடு
உன் சடங்கும் நடக்கும் !

அதுவரைக்கும்
இந்த உண்மை
ஊமையாகிப் போகட்டும் !

05.04.2001 களத்தில் பத்திரிக்கையில் பதிவானது

# *அணைந்தது தீச்சுவாலை*

பொங்கு தமிழ் ஈழமதில்
தங்குமா இனிக் கயவர் காலடி ?
வங்கக் கடல் மீதினில்
வஞ்சகர் தலை தென்படுமா ?
தீச்சுவாலை பெயரிட்டுப்
புறப்பட்டவர் ஓயாத அலை
வந்து அணைத்திட புறம்
காட்டி ஓடியவர்
எமை வென்றிடத் தான் முடியுமோ ?
என்னவென நினைத்தாய் எதிரியே
எலிக் கூட்டமென்றா எண்ணினாய் ?
ஆயிரம் படை குவித்தும்
கண்டது தான் என்ன ?
இலட்சத்தைக் கொட்டி ஆயுதம்
குவித்தும் தோல்வியென்னும்
தோட்டத்துக்குள் தொலைந்து
போனதே மிச்சம் !
படையா எடுக்கிறாய்
இது பண்டாரவன்னியன் பரம்பரை
இங்கு அந்நியனுக்கு இடமில்லை
இது சங்கிலியன் சந்ததி
அவனின் சரித்திரம் உலகம்
அறிந்ததே !
வாள் வீசி மண் காத்த மன்னர்களின்
வாரிசுகள் அல்லவா புலிகள் !
உன் பல குழல் எறிகணைக்கு
அஞ்சி ஓடும் அணில் குஞ்சுகள்
இல்லை அவர்கள்

தாயகத்தை மீட்பதே எம் இலக்கு !
வா ! பகையே...
போராட நெருங்கு !
வா ! பகையே வா ! போராடலாம்
உன் பல குழல் முன்னாடி
புலிகளின் விழிகளின் வழிவரும்
பொறியினைத் தாங்கிட முடியுமா ?
தரம் கெட்ட படையெடுப்பில்
தடுமாறிப் போனவனே
இலங்கைத் தீவில் இரு நாடு
நிச்சயம் ! இன்றோ நாளையோ
பலாலியும், திருகோணமலையும்
எம் வசம் !

எப்போதும்
ஒரு மொழி சொல்கிறோம் கேள்
நாம் பதுங்குகிறோமே தவிர
ஒதுங்குகிறவர் இல்லை !
ஆனையிறவில் அடித்த புயல்
ஆரம்பமாகி விட்டது
யாழை நோக்கி...
ஆயுத்தமாய் இருங்கள்
விரைவில் புலி பாயும்

17 - 23 வைகாசி 01 ஈழமுரசு பத்திரிக்கையில் பதிவானது

# கூவிய குயிலுக்குக் குண்டடியா...?

தேசத்தின் உண்மைக்காய்
கூவிய குயிலின்
குரலை நெரித்த பகை
யாரோ ?

கெடுதலைகளின் உண்மையைத்
தாக்கிய உத்தமனை
வீழ்த்திய வீணர் யாரோ ?

உண்மைப் பிரமாண்டம்
ஒன்று மண்ணில்
வீழ்ந்ததென்று கயவனே
கைகொட்டி நகையாடு !

சுதந்திர வானத்தில்
உண்மையைக் கூவ
எண்ணிய குயிலுக்குக்
குண்டடி கொடுத்தவனே கூத்தாடு !

தேசத்தின் இரத்தம்
தொட்டு எழுதிய
அவன் பேனா உமைச்
சும்மா விடாது !
ஆயுதமாகி ஆயிரம்
நிமலராஜனை உருவாக்கும் !

அப்போது
உன் பகை பந்தாடப்படும் !

ஆயுதத்தை முதலில்
அச்சுக் கோர்த்தது
தமிழ்வீரப் பரம்பரை தான்
அறிவாய் !

தன்மானம் இல்லாத
தாய்க்குப் பிறந்த
பிள்ளைகள்
இல்லை நாம் புரிவாய்!

எட்டப்பன்
பரம்பரையில் வந்து
வழி தவறிப் போன
பயணம் !
சிங்களவரின் காலடியில்
அவர்களின்
வாரிசுகள் கொஞ்சம்
அவன் போடும் மிச்சத்தை
உண்டு ஆயுள் வளர்க்கும்
அநியாயத் தஞ்சம் !

உலகத்தின் விழிகளில்
நிஜங்களை
காண்பிக்க வந்த மகானே !

பத்திரிக்கை
ஆசிரிய உலகத்தின்
நிஜமுகமே !
செய்திச் சேனையின்
தளபதியே !

கல்லறையில் இன்று
நீ உறங்கு
நாளை சுதந்திரத்தாயின்
மடியில் சத்தியமாய் மீண்டும்
ஜனனமாவாய் !

கூலிக்கு மாரடிக்கும்
கூட்டம் உள்ளவரை தான்
எங்களின் குயில்களுக்கு
குண்டடி கிடைக்கும்...
நாளை எம் ஜனநாயக
ஆட்சியில் குயில்கள்
சுதந்திரச் சிறகடிக்கும்

குண்டு கொண்டு தாக்கிய
அராஜக அரசியல் ஆட்சி
நிரந்தரமில்லை !
ஆனால்
பத்திரிக்கை அரசியல்
உலகத்தின் நிரந்தர ஆட்சி !

எந்த மூலையிலும்
அந்தக் குயில்கள்
கூவும் !
எங்கள்
நிமல்ராஜனைப் போல
உண்மையை மட்டும் !

02 - 08 கார்த்திகை 2000 ஈழமுரசு பத்திரிக்கையில் பதிவானது

# இது மருத்துவமல்ல...

குடி குடியைக் கெடுக்கும்
உன் அனுமதியின்றி
உயிரையும் எடுக்கும் - இது
அநியாய விளம்பரத்தின்
மோகம்

பொல்லாத போக்கிரிகளின் அராஜகம்
போத்தல் அரசியல்வாதிகளின்
கொடுமை

நிறநிறமாய் வடித்து
விற்பனைக்கு வந்திருக்கும் இவை
இளமையில் இன்பம்
முதுமையில் துன்பம்

விசத்தைத் திணித்து
வில்லங்கத்தை விதைத்து
வியாதியை உண்டாகும்!

விநியோகஸ்த்தர்கள்
கொடுக்கும் அவசர
மரண விண்ணப்பமிது
மறந்திட வேண்டாம்

கொஞ்சம் கொஞ்சமாய்
உயிரைக் கொள்ளும்
பொல்லாத கிருமிகளின் குடியிருப்பு

சரி பிழையை யோசித்து
முடிவெடுப்பதற்கு முன்பே
உன்னை முடித்துவிடும்
இது தண்ணீரால் ஆன சுடுகாடு

எத்தனை மில்லி குடிப்பாயோ
அத்தனை மில்லி
உயிரையும் இழக்கிறாய்
இது கண்களுக்குத்
தெரிந்த மரணம்

நீ குடிப்பது உடல்நலத்தின்
மருத்துவமல்ல
உயிர் இழப்பின் திராவகம்

மதுவை நாடுவதும் -விலை
மாதுவை நாடுவதும்
வருத்தத்திற்குரியது தான்

தோல்வியைத் தொட்டவுடன்
தோழர்கள் பலர்
தேடுவது மதுவையேயன்றி
வாழ்க்கையை அல்ல

காதல் தோல்வியா
இன்னொருத்திக்குப் பூக் கொடு
கல்யாணத் தோல்வியா
விதவைக்கு வாழ்வு கொடு
மதுவை நேசித்து மரணத்தை
மணக்காதே தோழனே!

# இந்தத் தாகம் அடங்காது

பொங்கும் தமிழ் இனி
எங்கும் தரணியில்
தங்கும் நிலை வருமடா
சங்கும் முழங்க இனி
குதியும் விளங்க
சரித்திரம் உலகில் படையடா

ஆண்டோம் ஆதியில்
இழந்தோம் பாதியில்
இன்னும் அடிமை தேவையா
தலைவர் சொன்ன வழியில்
வேள்வி செய்தால் இங்கே
தடைகள் தோன்றுமா

இனவெறி ஜாதியில் அந்தக்
கொடுமைப் பாதையில்
இன்னும் வதை சுமப்பதா
ஆயுதம் எடுத்து
அணியை நகர்த்து அங்கே
அநியாயம் நிலைக்குமா

தொல்லைகள் எல்லையில்
நிற்கும் வரையில் -மண்ணில்
விடியல் தோன்றுமா
எரியும் தீயில் எண்ணையின்
ஜாதியில் நீயும் வந்தால்
விடியல் தானே கிழம்படா

# நன்றி வணக்கம்

விடிந்தாலும் எழுதி
இருண்டாலும் எழுதி
நின்றாலும் எழுதி
இருந்தாலும் எழுதி

எழுதியெழுதி
என் ஆயுள்
காலத்தை
அழகாக்கினேன்

பயணம்
போகும் போதும்
வாசித்து
படுக்கைக்குப்
போகும் போதும்
வாசித்து
கிடைக்கும் சின்ன
ஆறுதல் நேரத்திலும்
வாசித்து

வாசித்து வாசித்து
என் சுவாசத்தில்
சுகம் உண்டாக்கிக்
கொண்டேன்

மேடையில்
கவிதை சொல்லி
வானொலியில்
கவிதை சொல்லி
போட்டியில்

கவிதை சொல்லி
பேட்டியில்
கவிதை சொல்லி

கவிதை சொல்லிக்
கவிதை சொல்லி
பல இதயங்களில்
இடம் பிடித்தேன்

சமுதாயத்திற்காகப்
பாடுபட்டு
தேசத்திற்காய்
பாடுபட்டு
காதலுக்காய்
பாடுபட்டு
குடும்பத்திற்காய்
பாடுபட்டு

பாடுபட்டுப் பாடுபட்டு
எதிலும் பயன்
இல்லாமல்
கடைசியாய் மருத்துவப்
படுக்கைக்கு வந்து விட்டேன்

இனி மணி பார்த்து
மாத்திரை போடுவதை
நிறுத்தி விட்டு
இந்த உலகத்திற்கு
நன்றி வணக்கம்
சொல்வது தான்
என் முடிவு!

*என் தாயாய் எனை வளர்த்து ஆளாக்கிய*
*என் பாசத்துக்குரிய*
*சகோதரி லிங்கேஸ்வரிக்கும், என் தந்தையாய்*
*எனைக் காத்து வளர்த்த*
*என் அன்புக்குரிய அத்தான் லிங்கேஸ்வரனுக்கும்*
*என் ஆயுள்கால நன்றி...*




புரட்சிக்கவிஞர் காசியானந்தனோடு
01.05.2004